# வானவில்



காஞ்சனா ஜெயதிலகர்

# வானவில்

## 1

நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பது வெகு உண்மை.

முள்செடியின் நிழல்தான். நிழல் குத்தக்கூட செய்தது.

ஆனால் வெளி உலக எரிப்பிலிருந்து பாதுகாப்பும் அளித்ததே. வெறிச்சிட்டிருந்த வீட்டைச் சுற்றிவந்தாள் கமலி.

சின்ன வீடுதான். ஆனால் கட்டில், பீரோ எல்லாம் ஒவ்வொன்றாய் மாயமான பிறகு, அறைகள் பெரிது போலத் தோன்றின.

அத்தைப் பாட்டி இருந்தவரை எட்டிப் பார்க்கவும் வராத பிள்ளைகள் அவள் இறந்த செய்தி கேட்டு ஆவலாய் ஓடி வந்தார்கள்.

“கிழவி பணம் எங்க வைச்சிருந்தது?”

"தெரியாதுங்க..."

"உங்கிட்ட செலவுக்குத் தந்திருக்குமே?"

"இல்லையே...மளிகை காயயெல்லாம் வீட்டுக்கே வந்திரும்..."

"ப்ச்...கடைசி செலவுக்குன்னு ஏதும் ஒதுக்கி வைக்கலை?"

"இப்படி திடீர்ன்னு போவாங்கன்னு எதிர்பார்க்கலையே..." கேவினாள்.

பீரோவை உடைத்து துழாவி அதிலிருந்ததைக் கொண்டு தான் பிள்ளைகள் தாயின் இறுதிச் செலவைப் பார்த்தனர்.

அதன்பிறகு பாட்டியின் சில நல்ல சேலைகள், பீரோ, கட்டில், பாத்திரங்கள் என்று ஒவ்வொன்றாய் மாயமாயின. ஜடப் பொருட்களை கவனமாய் எடுத்து பொத்தி வைத்தார்கள், உயிருள்ள ஜீவன் ஒன்று ஒவ்வொருத்தர் கண்ணால் பார்த்து அலமலந்து நின்றதைக் கண்டு கொள்ளவில்லை.

அப்பாவின் முகமே கமலிக்குத் தெரியாது.

மகளுக்கு 18 ஆகட்டும் என்று காத்திருந்தாற்போல அம்மாவும் இறந்தபிறகு... அவள் முழு அநாதை.

அத்தைப் பாட்டி எட்டின உறவு சிலசமயம் எட்டியாய் கசந்ததும்கூட. ஆனால் பாதுகாப்பு கிடைத்தது.

பாளையங்கோட்டையின் சிறு சந்திலிருந்த பதினைந்து வீடுகளில் இவர்களதும் ஒன்று. வாடகை வீடுதான். ஆக இம்மாத முடிவில் வீட்டுப் பொருட்கள் மாயமானது போல வீட்டிலிருந்து இவளும் மறைந்து போக வேணும்!

எங்கு போக...? இங்கு மறைந்தால் எங்குபோய் முளைப்பது?

இரவில் நாய்களின் ஊளைகளைக் கேட்டபடி மவுனமாய் அழுதாள்.



ஆனால் விடை தெரியவில்லை... போக்கிடமில்லை. கடைசியாய் கிளம்பிய அத்தையின் மூத்த மகனையும் வெட்கத்தையும் விட்டுக் கேட்கத்தான் செய்தாள்.

"நா...நானும் உங்கக்கூட வந்துடட்டுமாண்ணா?"

"மெட்ராசுக்கா...எங்க வீடு இதைவிட சின்னது கமலி..."

"நா...வேற எங்க போறது...?"

"இந்த ஏரியாவிலேயே அஞ்சு பள்ளிக்கூடம் இருக்குதே... வார்டனாய் ஏதேனும் வேலை கேட்டு அப்படியே தங்கிக்கோ... ஆச்சு..."

ஏதெனும் இது போலொரு ஆலோசனை சொன்னதே அதிகம் என்பது போல அதன்பிறகு அவர் கமலியை கவனமாய் தவிர்த்து விட்டுக் கிளம்பினார்.

எட்டின உறவைவிட, கிட்டத் தங்கியிருந்தவர்கள் அக்கறை காட்டினார்கள்.

"சாப்பிட்டியா கமலி...?"

"ஆச்சுக்கா..."

"வடை சுட்டேன்...உப்பு பாரேன்..."

"கமலி...இராத்திரிக்கு இங்கே வந்துரு படுக்க..."

"இல்லக்கா... பழகின இடத்திலதான் தூக்கம் வருது..."

"எவ்வளவு நாளைக்கு இந்த இடம் இந்த மாசம் முடிய இன்னும் ஒன்பது நாளா... ம்ம்...?"

"அக்கா... எனக்கு ஏதேனும் வேலை வேணும். இந்த வாரத்துக்குள்ளே கிடைக்கணும்..." தவிப்பாய் கேட்டாள்.

"இவருகிட்ட சொல்லி வைச்சிருக்கேன்..."

பக்கத்துவீட்டு பத்மாவின் கணவர் மறுநாள் செய்தித் தாளுடன் வந்தார்.

"இதைப் பார்த்தியாமா...?"

வாசித்தாள்.

"சரி...சரிண்ணா..."

"இதுவும் ஒரு குட்டையிலேருந்து மறுகுட்டைக்குத் தாவறாப்பலதான். வேணாம்னா விட்டிரு..."

"வயத்துபாட்டுக்கு ஏதோ ஒரு வேலை..."

"இன்னும் யோசிக்க ஒரு வாரம் இருக்குதும்மா..."

"ஆனா வேலை கிடைக்கணுமே... எழுதிப் போடறேன். இன்டர்வியூ இருக்கும்னு நினைக்கிறேன். அப்ளிகேஷன்ல போட்டோ கேட்டிருக்காங்க" "பத்மாவைக் கூட்டிட்டு போய் தெக்கு பஜார் ஸ்டூடியோவில் எடுத்துக்கோ..."

"தகவல் வந்ததும் சொல்லுமா... நான் துணைக்கு வரேன்."

"நன்றி... நான் போயிக்கறேன். இனி எந்த உதவியின்னாலும் உங்களைத்தானே கேக்கணும்... வேற யாருமில்லை..."

சுயபச்சாதாபத்தில் விழிகள் நிரம்பின.

"வேலை கிடைக்கலைன்னு வை... எங்க வீட்டில தங்கிக்கோ... மறுவேலை தேடுவோம்..."

கைமட்டும் கூப்ப முடிந்தது அவளால்.

ஆனால் யாரையும் சார்ந்தே வாழமுடியாது.

அவசர ஆத்திரத்திற்கு மனுஷன் ஒத்தாசை செய்வார்கள் தான். ஆனால் தின நடப்பிற்கு யார் தோளிலும் சாயமுடியாது- ஆக கிடைத்த வேலையைப் பற்றிக்கொள்ள வேண்டியதுதான்.

அதை நல்ல சேலை என்று சொல்ல முடியாது. ஆனால் இதுவரை கிழியாதது அது ஒன்றுதான். பழைய பழுப்பு நிற பூனம் சோபிக்காத நிறம் என்று உள்ளேயே கிடந்ததால் சேதமடையாத சேலை கருப்பு ரவிக்கையுடன் ஒத்துப்போனது.



வீட்டினுள்ளேயே அடைந்து கிடந்து மேலும் வெளுத்த அவளை பால் போலக் காட்டியது. அது கூந்தலை இறுக பின்னிக் கொண்டையாய் முடிந்தாள். வயது சற்று கூடுதலாய் தெரிந்தால் நல்லது.

பொறுப்பான ஆள் தேவை என்றிருந்ததே விளம்பரம்.

சின்னப் பொட்டு முகத்தைச் சிறுமி போலக் காட்ட பொட்டை அகலமாக்கினாள்.

துணிப்பையில் டிபன்பாக்சையும் போட்டாள். அதில் மூன்று இட்லிகளுடன் துளி மிளகாய் சட்னி.

நேர்முகத் தேர்வுக்கு நிறைய போட்டி இருந்தது. எனில் தாமதமாகக் கூடும். கையிலிருக்கும் சொற்ப தொகையை வெளியே சாப்பிட்டுக் கரைக்க முடியாது. பத்மாவிடம் போய் சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

கான்வென்ட் பிள்ளைகள் பச்சை வெள்ளை சீருடையில் கொத்து கொத்தாய் பேச்சும் புன்னகையுமாய்... போனார்கள்.

ஏக்கமாய் அந்த இளம் முகங்களைப் பார்த்தபடி பஸ் ஏறினாள்.

ஜங்ஷனில் அந்த அலுவலகத்தைக் கண்டுபிடிக்க சிரமமில்லை.

மாடியில் இருந்த இரு சின்ன அறைகள்தான். முன்னறையில் இரு இளைஞர்கள் அமர்ந்து பைல் புரட்டிக் கொண்டிருந்தார்கள்.

"குட்மார்னிங்... பேப்பரில் விளம்பரம்... சார் வரச்சொல்லி கார் வந்தது..." தடுமாறி ஒருவாறு விளக்கினாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து ஒரு தினுசாய் சிரித்துக் கொண்டார்கள்.

"சார்... உள்ளே வேலையாய் இருக்கார்...உக்காருங்க..."

"ம்ம்..."

சுவர் ஓரமாய் நான்கு ஸ்டீல் நாற்காலிகள் வரிசையிட்டிருந்தன.

படபடப்பில் வியர்த்தது. உட்கார்ந்து முகம் துடைத்தாள்.

மனதுக்குள் கடவுளைத் துணைக்கு அழைத்தாள்.

இரு ஆண்களுக்கு எதிரே அந்த சின்ன அறைக்குள் இருப்பதுகூட அவஸ்தையாய் தோன்றியது.

அத்தைப் பாட்டி வாசல் பக்கமே விடமாட்டாள்.

"வாசப்பக்கம் தலைகாட்டாதடீ... பால்கோவா மாதிரியிருக்கே... எந்த நாய் கண்ணால நக்குமோ...உள்ளேயேக் கிட..."

உதிரிப்பூ இரண்டு ரூபாய்க்கு வாங்கிக் கட்டினால் தலை நிறையச் சூடலாம். ஆனால் பாட்டி ஒரு நாளும் வாங்கி விட்டதில்லை. அண்டை வீட்டார் மனதிரங்கி தரும் பூச்சரம்தான்.

அதற்கும் திட்டு உண்டு.

"வயசுப்பொண்ணை ஒண்டியா வைச்சிருக்கேனேனு பதறுறேன்... அதுல நீ சிங்காரிச்சுட்டு வேற நிக்கறே... வேற வினைவேணுமா?தர்றதையெல்லாம்ஏன் 'ஈ' ன்னு இளிச்சுட்டு வாங்கிக்கறே? வேணாங்க ஏன்' வாய் வரலை?"

"மங்கலப் பொருளை எல்லாம் வேணாங்கக் கூடாதும்மா... அதுவும் பெண்ணுங்க பூவை மறுக்கக்கூடாது" என்று அம்மா சொல்லியிருந்த ஞாபகம்.

ஆனால் வெறும் இருபத்தியிரண்டு வயசில் மனம் முக்கால் துறவியாகி விட்டிருந்தது. அந்தக் கால்வாசி ஏக்கம்கூட பகட்டான வாழ்வுக்காய் அல்ல...அன்பு...



ஆதரவான நாலு வார்த்தைக்காகத்தான். பாட்டி அதையும் கொடுத்தாளில்லை.

ஏவலும், குத்தலான திட்டும்தான். ஆனால் அந்த முள்மரத்திலும் நிழல் இருந்தது.

மூன்று நாள் காய்ச்சலில் பாட்டி போனபிறகு கண் எட்டிய தூரம்வரை நிழலில்லை- கடும் வெயில் எரித்தது- கலவர மூட்டியது.

எதிர்கால பயத்தில் இறுகி உட்கார்ந்திருந்தவளை உள் அறையில் இருந்து வந்த சிரிப்பு உலுக்கியது.

"நீங்க லேசுபட்ட ஆளில்லை காந்தன்..."

பெண்குரல் ஒன்று குழைந்து கொஞ்சியது.

## 2

நேரம் ஆக ஆக கொஞ்சல் கூடியது.

பேச்சு தெளிவாக இல்லாவிடிலும் சல்லாபமாய் கேட்டது. இத்தகைய கிளுகிளு சிரிப்பு கமலிக்குப் புதியது.

இவளுடன் இருந்த இரு இளைஞர்கள் அடிக்கடி ஒருவருக்கொருவர் விஷமமாய் பார்த்தது அடுத்த சங்கடம். உள்ளிருக்கும் பெண்ணிற்கு அத்தையோ பாட்டியோ நிச்சயம் இருக்கமாட்டார்கள் எனத் தோன்றியது. இருந்தால் கண்டித்து வளர்த்திருப்பார்கள் இல்லையா?

கடந்த நான்கு ஆண்டுகளாய் கமலிக்கு சிரிக்க வாய்ப்பே இல்லை!

"இரத்த அழுத்தம் கூடிடுச்சுங்கறார் டாக்டர்... எனக்கு சத்தமே ஆகலை. நீயான்னா பாத்திரங்களைப் போட்டு உடைக்கிற... மெள்ள புழங்கேன்..." என பாட்டி இரைய, இவள் பூனை போலதான் நடமாடுவாள்.

பாட்டுச் சத்தம்கூட ஆகாது என்பதால் பழைய மர்பி ரேடியோ மூடிக்கொண்டு தூங்கியது. வீதியை அடக்க முடியாது என்பதால் வீட்டு சன்னல், கதவுகள் 'கிச்'சென மூடிக்கிடக்கும். மயான அமைதியில் கமலி அவ்வப்போது கேட்க நேர்வது பாட்டியின் உடல்நிலை, அவள் பிள்ளைகள் பாராமுகம் பற்றிய புலம்பல்கள்தான்.

இதில் சிரிப்பதெப்படி?

எப்போதேனும் அண்டை அயல் வந்து வீட்டில் பேசி சிரித்தாலும் பாட்டிக்கும் பொறுக்காது. காதையோ கன்னத்தையோ திருகி எடுத்துவிட்டாள்.

"அதென்னடி அவிசாரி கணக்கா கிளுக்கறே? வாயத் தைச்சுடட்டா?"

ஆனால் இந்தப் பெண்ணின் பேச்சு ஓயவில்லை. ஒவ்வொரு வாய்க்கும் உடன் நொறுக்கும் அப்பளமாய் சிரிப்பு வேறு!

தான் மட்டுமாய் காத்திருக்கிறோமா-ஏன்?

வேறு யாரும் இன்டர்வியூவிற்கு வரவில்லையா?

அவளது மறுபடி புத்தி ஆறுதல்படுத்தியது-

"வரலைன்னா உனக்குச் சாதகம்தானே- வேலை நிச்சயம் உனக்குத்தான்..."

துணிச்சலை வரவழைத்துக் கேட்டாள் - "உள்ளே இருக்கிறவங்க இன்டர்வியூக்கு வந்தவங்களா?"



இளைஞர்கள் புருவம் தூக்கி சிரித்தனர்.

"நினைச்சா தினம் இன்டர்வியூ நடத்தலாம் அவங்க..." மெள்ளச் சொன்னான் ஒருத்தன்.

ஆக முதலாளி அம்மாவோ?

உள் அறையில் மரநாற்காலிகள் நகர்த்தப்படும் சத்தம்- பேசி முடித்து எழுகிறார்கள் போலும்.

தானும் அவசரமாய் எழுந்தாள் கமலி.

"டர்..." நாற்காலியின் இரும்பு முனை சேலையை இழுத்துக் கிழித்தது. தொண்டை அடைத்தது.

இடதுகையால் கிழிசலை மூடியபடி சேலையைத் தொய்யவிட்டு மறைக்க முயன்றாள்.

அறையைவிட்டு முதலில் பெண் வெளிவந்தாள்- பெண் என்று சும்மா சொல்லிவிட முடியாத அழகு.

ஆரஞ்சுநிற சல்வார் அவள் மேனிக்கு வெகு பொருத்தம்.

தொளதொளவென்று கூடாரம் போலில்லாமல் அவள் தேகத்திற்கேற்ப இறுக தைக்கப்பட்ட உடை- ஆக சிற்பம் போல தெரிந்தாள். மருதாணி இட்டு செம்பழுப்பு ஏற்றிய கூந்தல் விரிந்து பறந்தது.

பாதங்கள் கூட பாலில் கழுவிய பளிங்குபோல பளீரிட்டன. அதென்ன... செருப்பு... தங்க விளிம்பிட்ட கண்ணாடி போல... இப்படிக்கூட செருப்புகள் கிடைக்குமா?

என்ன விலை இருக்கும்?

சேலை கொசுவத்தை இறக்கித் தன் உரிந்த 'ஹவாய்'யை மறைக்க முயன்றாள் கமலி.

"வரட்டுமா காந்தன்?"

'டக்டக்'கென தாள லயத்துடன் நடந்தவளைத் தொடர்ந்து வெளிவந்தவனை கண்டு மேலும் விழி விரிந்தது கமலிக்கு.

இவனா... இவரா காந்தன்-ஜெயகாந்தன்?

முப்பதுகூட இருக்காதே?

சிரிக்கையில் பளபளவென்று திரண்டன அவன் கன்னங்கள் - பல்வரிசை அபாரமாய் மின்னியது-இவரா தன் முதலாளி?

"ரொம்ப நன்றி... பார்ப்போம்" கண்சிமிட்டலுடன் இடது கையின் இருவிரல்களை நாசூக்காய் ஆட்டினாள். கிளம்பிய பாவை.

"பை பை" பளிச்சென்று கை உயர்த்தி விடைதந்தவன் பார்வை கமலி மீது படிந்தது.

இவள் விரல்கள் நடுங்கின. சேலையின் கிழிசல் தெரிகிறதோ?

"வணக்கம்..." உலர்ந்த உதடுகளை அசைத்தாள்.

"குட் மார்னிங்..." முறுவலித்தான்.

வாசல்புறமிருந்து அந்த அழகியின் பார்வையும் கமலியை அலசியது.

துணியைக் கிழிக்கும் துணிக்கடை கத்தரி போல 'சர்'ரென்று இவளைப் பாதி கேசம் ஊடுருவியது.

இவளையும் வணங்க வேண்டுமா? புரியாமல் கை பிசைந்து நின்ற போதே அவள் வெளியேறிவிட்டாள்.

"இன்டர்வியூக்குத்தான் வந்திருக்கீங்க?"

"ஆ...ஆமா..."

"சாரி... காக்க வைச்சுட்டேன்... உள்ளே வாங்க."



அது ஒரு 'ரியல் எஸ்டேட்' அலுவலகம் என்றது பலகை. சின்ன எட்டுக்களாய் வைத்து உள்ளறைக்குள் நுழைந்தாள். அடுத்தவளைப் போல மிடுக்காய் நடக்க முயன்றால் சேலைக்குக் கேடு... மேலும் கிழியும்... செருப்பு அறுந்தாலும் ஆச்சரியமில்லை!

அவளை நான்கே எட்டில் முந்தியவன் தன் மேசையின் பின்னே போய் நின்று "உக்காருங்க" சைகை செய்தான்.

"இல்லைங்க..."

"பெண் உட்காராம நான் உட்கார முடியாதே... வெளி நாட்டிலேயும் படிச்சேன். அங்குள்ள கலாசாரம் அது. பிடிச்சு... பழகிடுச்சு..."

மிகக் கவனமாய் அமர்ந்தாள்.

"வேற யாரும் இன்டர்வியூக்கு வரலியேன்னு யோசிச்சிருப்பீங்க..."

"இ...இல்லையே..."

"ஏன் யோசிக்கிறதே இல்லையா?" இடதுப்புற புருவம் தூக்கி சிரித்தான். என்ன வம்பு இது? மரியாதை நிமித்தம் இப்படித்தானே சொல்ல முடியும்?

"உங்களை... ஒருமையிலே அழைக்கலாமா கமலி..."

"ம்ம்..."

"உனக்கு மட்டும்தான் இன்டர்வியூ அழைப்பு..."

"நன்றிங்க..."

"நன்றியை எம்பாட்டிக்குத்தான் சொல்லணும் நீ. வந்த பதினாறு விண்ணப்பங்கள்ல அவங்க தேர்ந்தெடுத்தது உன்னை மட்டும் தான்..."

"சந்தோஷம்..."

"முன் அனுபவம் ஏதும்...?"

"இல்லைன்னு குறிப்பிட்டிருந்தேனே...?"

"நாலு வருடம் உன் பாட்டியை கவனிச்சுகிட்டதாய்...?"

"சொந்த பாட்டி இல்லை... தூரத்து உறவு..."

"ஆங்... அந்த அனுபவம் போதும்னு எங்க பாட்டி சொன்னாங்க..."

"எனக்குத் தெரிஞ்ச ஒரே வேலை... வயசானவங்களைப் பார்த்துக்கறது."

"உன் பாட்டிக்கு ஏதும் வியாதி இருந்ததா?"

"பலதும் இருந்துச்சு..." மூளைக்கோளாறு உள்பட என்ற சலிப்பான எண்ணத்தை அடக்க முடியவில்லை அவளால்.

"எப்ப இறந்தாங்க?"

"பதினாறு நாள் ஆச்சு."

"சும்மா வீட்டில் இருக்க பிடிக்கலையா?"

"அப்படியில்லை... இருக்க முடியாது. வீடு வாடகை வீடு. நாளைக்குள்ளே காலி பண்ணனும். வேற உறவுக்காரங்க இல்லை. இந்த வேலையை ரொம்ப நம்பி வந்...வந்தேன்..."

"வேலை கிடைச்சாச்சு. நாளை காலை ஊருக்குக் கிளம்பிடலாம். அது குற்றாலம் பக்கத்திலே உள்ள கிராமம். ஒண்ணாந்தேதி வேலையை ஆரம்பிக்கலாம்... சரிதானா?"

வேலை கிடைத்த நிம்மதியில் வெகுசின்னதாய் அவளது உதடுகள் மலர்ந்தன.

அவளையே ஊன்றிப் பார்த்தான்.

"வயசு இருபத்திரண்டுன்னு குறிப்பிட்டிருந்தே...?"



"ஆமா சார்..."

"பதினெட்டு கூட ஆகலைப் போலத் தோணுது..."

"+2 சர்டிபிகேட் கொணந்திருக்கேன் சார். ஸ்கூல் முடிச்ச வருடம்தான் அம்மா த...தவறிட்டாங்க. அப்புறம் பாட்டிக்கு உதவியா இருந்தேன்."

"மேல படிக்கலியா?"

"சந்தர்ப்பம் அமையலை..."

"+2ல் என்ன டோட்டல்?"

"980..." மார்க் பட்டியலை நீட்டினாள்.

"ம்ம்..." கண்ணை உருட்டினான். "கல்லூரி படிப்பில் உற்சாகமாய் கழிய வேண்டிய நாலு வருடம் வியாதிக்கார பாட்டியோட கழிஞ்சாச்சு. இப்ப அடுத்த வியாதிக்கார பாட்டி... வியாதி அதிகமில்லை. ஆனால் வீம்பு நிறைய... பாவந்தான் கமலி நீ...!"

தொண்டையில் கோலிகுண்டு சிக்கினாற்போலிருந்தது- குனிந்து கொண்டாள்.

"இங்க வீட்டிலே வேற யார் இருந்தாங்க?"

"யாருமில்லை... நாங்க ரெண்டே பேர்தான்... பாட்டி போனதும் நான் மட்டும்தான்."

"எங்க வீடு பெரிசு... அங்கேயும் நாங்கே ரெண்டே பேர்தான்... சுற்றிலும் தோப்பு. சமையலுக்கு ஆளுண்டு... துரைப்பாண்டி... பாட்டியைத் தவிர நான் மட்டும்தான்- அதிலே உனக்கு ஆட்சேபணை இல்லையே..."

இதென்ன கிண்டல்? ஆட்சேபிக்கும் நிலையா தனக்கு? தலைக்கு மேலே கூரையும் ரெண்டுவேளைக் கூழும் போதுமென்ற அவலம்.

“உங்க வீட்டில... நீங்க இருக்கறதுக்கு நான்... என்ன... சொல்ல...?”

“ம்ம்... பால்கோவா போல நாமிருக்கோம்... இப்படி ஒரு பூனைப் பயலோட எப்படி தங்கன்னு பயப்படலாமில்லையா?”

கண் சிமிட்டிக் கேட்டான்.

அத்தைப் பாட்டியின் அதட்டல் நினைவிற்கு வந்தது. அவளும் இதே பால்கோவா உவமையைத்தானே சொல்வாள்?

“அப்போ... உங்களுக்குக் கல்யாணமாகலையா?”

துளி குழப்பமும் வியப்புமாய் அவள் விழித்த குழந்தைத்தனத்தை புதிதாய் பார்த்தான்.

“பாட்டிக்கும் எனக்கும் சேர்ந்து பிடிச்சாகணுமே பொண்ணை! நாளை காலை பத்துக்குள்ளே இங்கே வந்துட்டா... நானே உன்னை அழைச்சிட்டுப் போறேன்...”

பாட்டிக்கு நிச்சயம் இவனோடு பேசிக் கொண்டிருந்த அந்த சதா பல்லைக் காட்டும் அழகியைப் பிடிக்காது என்று நினைத்தவள், காந்தன் எழும்பவும் தானும் அவசரமாய் எழுந்தாள். சேலைக் கிழிசலைப் பதட்டமாய் இழுத்து மூடுவதற்குள் அவன் கண்டுகொண்டான்.

ஆனாலும் காணாதது போலவே காட்டிக் கொண்டான்.

“சரி என்னைக்குக் கிளம்பலாம். நானே கூட்டிட்! போயிடறேன். அதுதான் சுலபமும் கூட” என்றான் புன்னகையுடன்.

“இல்ல... நா... நா... தனியே பஸ்சில வந்துடுறேன்...”

“ஒரு பஸ்சையே வாடகைக்கு அமர்த்தி வரப்போறியா? பெரிய ஆளாயிருப்பே போலிருக்கே?” ஆச்சரியமாய் பார்த்தான் பொதுவாய்.



“அம்பது அறுபது பேரோடதான் வரணும்.”

“ஆமா அப்படித்தான்... உங்கக்கூட வரலைங்கறதை அப்படிச் சொன்னேன்.”

“ஒரே வீட்டில் தங்கப்போறோம். அதுக்கு ஆட்சேபணை இல்லைன்னா... ஒரே காரிலே போக என்ன தடை?”

“நீங்க... முதலாளி...”

“உனக்குக் காரோட்டத் தெரியுமா?”

“ம்ம்...?” விழித்தாள்.

“தெரிஞ்சா உன்னை ஓட்டச் சொல்லிட்டு நான் ஜம்முனு பின் சீட்டில் உட்கார்ந்து வரலாம். உனக்குத் தெரியாது. ஆக உன்னை உட்கார வைச்சு நான் சாரதி வேலை பார்க்க வேண்டியதுதான். தவிர எங்க வீட்டு வாசல்வரை பஸ் வராது. ஒன்றரை மைல் நடக்கணும். மூட்டை முடிச்சோட சிரமப்படவேணாம் நீ...”

“ சரி சார்.... நன்றி....”

சொல்லாமல் இவனிடம் மல்லுக்கு நிற்க முடியாது.

‘ஆம்’ ‘சரி’ என்றளவில் இவனிடம் பேச்சை நிறுத்திக் கொள்வது உசிதம் என்று மனதில் குறிப்பெழுதி வைத்தாள் கமலி.

## 3

நைந்த பர்சை மீண்டும் திறந்து அதனுள் மொட மொடத்த நூறு ரூபாய் நோட்டுக்களை நீவினாள்.

இந்தப் பணத்தையும் ஏறக்குறைய அவளிடம் திணித்து விட்டான்.

"ஆரம்ப சம்பளம் இரண்டாயிரம்..."

மூச்சடைக்க... முழித்தாள்.

"என்ன... குறைவா...ஜாஸ்தியா?"

"ஐயோ... எனக்குப் பாதுகாப்பாய் ஒரு இடம் போதுங்க.."

"திருடன், காலிபசங்க உள்ளே வரமுடியாது. ஆனால் நான் இருப்பேன்...!" குறும்பு பேசினான்.

"பாட்டி கடுமையான ஆள்- ஊர்... வீடு ஒதுக்குப்புறம். ஆக பொழுதுபோகாது. வந்த மூணு, நாலு மாசத்திலேயே பலர் கழண்டுக்குவாங்க... ரெண்டு நர்ஸ் கூட வைச்சோம்...முடியலை..."

"ஓ...?"

"சுள்ளுனு கோவம் வரும். கொஞ்சம் 'நை...நை'ம்பாங்க. வயசு அப்படி."

"என் பாட்டியும் அப்படித்தான்."

"அவங்களுக்கு என்ன வயசு...?"

"எழுவத்தாறு."

"என் பாட்டிக்கு எண்பத்தொண்ணு... ஐஞ்சு வயசுக் கூடன்னா அழிம்பும் ஐஞ்சு மடங்கிருக்கும்!"

"பர...பரவாயில்லை சார்..."

"அப்ப பாட்டி சொன்னது சரிதான். பொறுமையான, பொறுப்பான பொண்ணுனு முகம் சொல்லுது. இவளை மட்டும் வரவழை போதும்னாங்க... ரெண்டு மாசத்தில் உன் வேலை திருப்திபட்டதுன்னா சம்பளம் கூடும். இப்போ முன்பணம் ஆயிரம் தரேன்..."

"ஐயோ... அவ்வளவு அவசியமில்லை..."

"எங்க வீட்டு பக்கத்தில் கடை... ஏன் வேற வீடுகூட கிடையாது. ஆகவேண்டியதை எல்லாம் இங்கேயே வாங்கிடு..."



சரசரவென்று நோட்டுக்களை எண்ணி ஒரு கவருள் வைத்து நீட்டினான்.

அவன் பணத்தை எண்ணிய லாவகத்திலிருந்து அவனது பணப் புழக்கம் புரிந்தது. தனக்குப் புது நோட்டைத் தொடவும் கூசுமே...!

தனியே கடைக்குள் நுழைந்தபோது வெடவெடத்தது.

அம்மாவோடு சிலமுறை சேலை எடுக்கப் போனதுண்டு.

கடந்த நான்கு ஆண்டுகளில் தீபாவளிக்குக்கூட கோடியில்லை. பாட்டி தன் மருமகள்களிடமிருந்து அவர்களுக்கு வேண்டாத ஒரு பழையச் சேலையை வாங்கி இவளிடம் தருவதோடு பண்டிகைக் கடமை தீர்ந்துபோகும்.

இன்று வேலையோடு... முன்பணமும் வேறு.

குதித்து ஆடி சிரிக்க வேண்டும் போலிருந்தது.

குதூகலத்தை உள்ளே அமுக்கியும் கூட முகத்தில் வழிந்தது. இரண்டு சேலைகள் எடுக்கலாமா?

நாலு ரவிக்கைகளாவது தேவை. உள்ளாடைகள் மிக அவசியம். அங்கே போனால் இருக்கும் கந்தலை அலசி வெளியே உலாத்தக்கூட முடியாதே.

மூன்று செட் உள்ளாடைகள், ரவிக்கைத் துண்டுகள், சோப்பு, பவுடர், வகைகளை வாங்கியபின் ஒரே ஒரு சேலைதான் எடுக்க மனமிருந்தது. முழுசாய் பணத்தைக் கரைக்க கைவரவில்லை.

வீடு திரும்பியவள் வாங்கி வைத்திருந்த லட்சுமி விலாஸ் அல்வாவோடு பத்மா வீட்டுக்குப் போய் நன்றி சொன்னாள்.

மாலை பத்மா சேமியா கேசரி கிளறி கொண்டு வந்தாள்.

"நாளைக்கு எங்க வீட்டுல வந்து சாப்பிட்டுட்டுப் போ."

"பரவாயில்லக்கா..."

“நீ சமைக்கவா முடியும் கிளம்பற அவசரத்தில்? மூணு இட்லி, காபி- இங்கதான்.”

“தாங்க்ஸ் அக்கா.”

“போனதும் உன் விலாசம் எழுதிப் போடு கமலி. அப்பப்போ நானும் எழுதறேன். நமக்கும் ஆளிருக்காங்கன்னு தெம்பு உனக்கு வரும்...”

அனைவரிடமும் போய் சொல்லிக்கொண்டாள்.

தன் உடமைகளைச் சேர்த்து கட்டும்போதும் நினைத்தது போல அழுகை பொங்கினாலும் இனந்தெரியாத உற்சாக மிருந்தது. புதுச்சேலை இருக்கும் உல்லாசம் வேறு.

மறுநாள் தலைக்குக் குளித்து, புதுசைக் கட்டினாள். வெளிர் மஞ்சளில் ஆரஞ்சு பூக்கள் சிதறிய சேலை.

தூக்கிப் போகமுடியாத பொருட்களை ஒரு பழைய டிரங்கில் போட்டு பத்மா வீட்டுப் பரணில் ஏற்றினாள். காலை உணவை அவர்களுடன் சாப்பிட்ட பின் இருபைகளைக் கைக்கொன்றாய் தூக்கியபடி வெளியே வந்தவள் விக்கித்துப் போனாள்.

சந்தின் இறுதியில், பிரதான சாலையில் காரை நிறுத்திவிட்டு அதில் சாய்ந்து நின்றான் ஜெயகாந்தன்!

இவளைக் கண்டதும் வேகமாய் நடந்து நெருங்கினான். நீண்ட எட்டுக்களை வைத்து முனைப்பாய் வந்தவனைப் பார்த்தவளுக்கு உள்ளூர உதறியது.

நீ வேலைக்கு வரவேண்டாம் என்பதைச் சொல்ல தேடி வந்திருக்கிறானா? இல்லை... அவன் பாட்டிக்கு ஏதேனும் நேர்ந்து விட்டதா...?

முகம் வெளிறி நின்றவளை நெருங்கியவன் இரு கைகளையும் நீட்டினான்.

மேலும் திகைத்தாள்.



இயல்பாய் அவள் பைகளை வாங்கி... ஏறக்குறைய பிடுங்கிக் கொண்டான்!

“ஐயய்யோ... வேணாம் சார்...”

“ஏன்? நான் உன்னைவிட 25 கிலோ கூடுதலாய் இருக்கும் முரட்டு ஆண்பிள்ளை என்பதாலா?”

“நீ... நீங்க முதலாளி...”

“அந்த நினைப்பு வேலை செய்யும்போது இருந்தால் போதும். வேலையை இன்னும் உற்சாகமாய் செய்யத் தோணும்.”

அவன் பேச்சு முழுதாய் புரியமாட்டேங்கிறதே போல விழித்தாள்.

“புரியலை...? இத்தனை அழகாய் ஆண்மையாய் ஒரு முதலாளி இருந்தால் சலிப்பான வேலையைக்கூட சந்தோசமாய் செய்யத் தோணுமில்லையா?”

உரக்க சிரித்தான். சிரிக்கையில் வெகு கவர்ச்சியாய் தெரிந்தான். இருந்தாலும் இதென்ன அக்கிரமமான பேச்சு!

அத்தைப் பாட்டியின் ஆன்மா வீட்டைச் சுற்றியபடி இருந்தால் நிச்சயம் இதைக் கேட்டு அதிர்ச்சியாகி இருக்கும். சஞ்சலத்துடன் வீட்டைத் திரும்பிப் பார்த்தாள்!

“போலாமா?”

“என்னைக் கூட்டிப்போகவா இத்தனைதூரம் வந்தீங்க?”

“மூணே கிலோ மீட்டர்தான். பஸ் ஸ்டாண்ட் வரை நடந்து, நெரிசலோட நசுங்கணும். நீ விண்ணப்பத்திலே விலாசம் இருந்தது. அதான் வந்தேன்.”

“ரொம்ப...”

“ஐயோ...வா?”

குழப்பமாய் பார்த்தாள்.

"எந்த உதவிக்கும் 'ஐயோ'தானே சொல்லுவே? அதான் நானே சொல்லிட்டேன்."

உதட்டைக் கடித்தாள். செப்பு உதடுகள் இரத்தமாய் சிவந்தன.

"அடிக்கடி கடிச்சுக்கோ..."

"என்ன...எது?"

"உதட்டைக் கடிச்சா சிவக்கறது. ரொம்ப வெளுப்பா வெளிறித் தெரியறே... கொஞ்சம் லிப்ஸ்டிக் போட்டா நல்லது..."

"ஐயோ... பாட்டி...!"

"எங்கே...? உன் கண்ணுக்கு மட்டும் தெரியறாங்களா?"

சுற்றிலும் பார்த்து வானத்தையும் துழாவினான்.

அவன் பேச்சு கலவரப்படுத்தியது என்றாலும் சற்று பழகிய பின்பு சிரிக்க வேண்டும் போலவும் இருந்தது.

"பெரியவங்களுக்குப் பிடிக்காதுன்னு சொல்ல வந்தேன்..."

"நானும் உன்னைவிட 8 வயசு பெரியவன். என் சொல்பேச்சைக் கேட்டு நட..."

ஆணையிட்டவன் காரின் பின்புறத்தில் பைகளை வைத்தான்.

"பெட்டி இருக்குமே?"

"இல்லை... இல்லிங்க சார்..."

"இவ்வளவுதானா?"

"ஆமா சார்."

"விசுவின் 'அரட்டை அரங்க'த்தில் பேச தயாராகிட்டிருக்கியா?"



காரில் ஏறும்படி சைகை செய்ய வாயடைத்து ஏறினாள்.

"புரியலை? மூச்சுக்கு ஒரு 'சார்' போடறியே... அதான் கேட்டேன். சன் டி.வி. பார்ப்பேல்ல?"

"சில நாள் பார்த்திருக்கேன்."

"என் பாட்டிக்கு டி.வி.யில் அத்தனைத் தொடரை வாசித்துக் காட்டி, அதைக் கிழிச்சும் சேர்க்கணும்... பெண்ட் பண்ணிக்கு வாங்க."

இனி அந்த வார்த்தை சொல்லக் கூடாது என்ற சங்கல்பம் மறந்து போனது. கூவினாள்.

"ஐயோ...!"

"அடடே.... நன்றிங்கிறியா?" என்று பக்கவாட்டில் திரும்பி பார்த்தவன் வாயடைத்துப் போனான்.

சிரித்த கமலியின் முகம் அவளது பெயரைப் போல தாமரையாகி இருந்தது. தெற்றுப்பல் கவர்ச்சி அபாரம்.

"சாரி சார்..."

"சார் வேணாம்னேனே?"

"சந்தோசத்தில் வாய் தவறிடுது..."

"என்ன சந்தோசம்? இப்படி என் பக்கத்தில் உட்கார்ந்து வர்றதா?"

சீரியசாய் முகம் வைத்துக்கொண்டு கிண்டலடிப்பது அவன் குணாதிசயம் என்பது புரிந்து போக-

"அதில்லை... எனக்குப் பத்திரிகை வாசிக்க ரொம்ப பிடிக்கும். ராணிக்கா வீட்டுக்கு வர்ற சிலதை வாங்கி வாசிப்பேன். ஆனா..."

"பாட்டிக்குப் பிடிக்காதாக்கும்?"

பேசியபடி பிரயாணத்தில் ஒரு மணி நேரம் போனது தெரியவில்லை. இடையே ஆலங்குளத்தில் இளநீர் வாங்கித் தந்தான். இந்த இனிமையான மாற்றம் கமலியைத் தளர்த்தியிருந்தது.

புது எஜமானியம்மாளை, அவள் கோபத்தை, பார்க்கும் அச்சத்தை விட ஆவல் இப்போது மிகுந்திருந்தது.

புது சூழலில் வீடு... அங்கிருக்கும் புத்தகங்கள், பத்திரிகைகள். அவ்வளவுதானா? உள்ளே பொங்கும் இந்த குதூகலத்திற்கு காரணம் என்ன?

இப்படிச் சிரிக்கச் சிரிக்கப் பேசும் காந்தனுடன் இருக்கப் போவதும்கூட காரணமோ...?

"இதோ வீடு வந்தாச்சு..."

பார்த்தாள்... மலைத்துப்போனாள்.

வீடில்லை-அது மாளிகை!

பசும் தோட்டத்திற்கு நடுவே விஸ்தாரமான வெள்ளைக் கட்டிடம். முகப்பு நெடுக படிகளும், அலங்கார வளைவுகளுமான கம்பீர மாளிகை அது.

"ரொம்ப அழகாயிருக்குது" என்றாள்.



## 4

"பாட்டி..."

பேரன் அழைப்பிற்குத் திரும்பிய முகத்தை ஆவலாய் பார்த்தாள் கமலி. வெகு கம்பீரமான முகம் அது.

துலக்கிய தாமிர நிறம். பஞ்சாய் நரைத்திருந்தாலும் வகிடின் இருபுறமும் புறாச்சிறகாய் எம்பி நின்ற தலைமுடி...

எத்தனை கூர்மூக்கு. தீட்சண்யமான பார்வை...

நரம்போடிய முதிய விரல்கள் மும்முரமாய் கம்பளியில் பின்னிக் கொண்டிருந்தன. பின்னல் ஊசி விடுவிடுவென்று அசைந்து கோர்த்தன.

கரம்குவித்தாள்.

"வணக்கம்மா."

"வா வா" முதியபார்வை இடுங்கியது.

"பக்கத்தில் வா, தெளிவாத் தெரியலை..."

நெருங்கிய கமலி இயல்பாய் முதியவள் அருகே முழங்காலிட்டாள்.

"ஆங்... இப்ப தெரியுது."

"பாவமன்னிப்பு கேட்கப்போறாளா பாட்டி? அப்பாவியாய்" கேட்டான் பேரன்!

"போடா நீ வெளியே."

"ஏன்? ரொம்பப் பாவமான காரியமா?"

கமலிக்கே சிரிப்புத் தாளவில்லை.

அடக்கினாலும் முறுவல் நெளிந்தது.

"ம்ம்... இப்பத் தேவலை. முதல்ல ஏதோ மோகினிப் பிசாசுன்னு நினைச்சுட்டேன்!"

முதியவள் சொல்ல மலைத்துப்போனாள்.

இதென்ன...? பேரனுக்குச் சற்றும் சளைத்தவள் இல்லை போலவே பாட்டி!

"இப்படியா வயசுப் பொண்ணு வெளிரிக் கிடக்கிறது... பவுடர், ஸ்னோ பூசின மாதிரியும் தெரியலை...?"

"பால்கோவா நிறம்னு நினைச்சேன்..." இடைபுகுந்து கருத்து சொன்னான்.

"உன்னைப் போகச் சொன்னேனே காந்தா..."

"உங்க தேர்வு உங்களுக்குப் பிடிச்சிருக்கான்னு தெரிஞ்சுக்கத்தான்... திட்டியும் போகாமல் நிக்கறேன்."

"அதெல்லாம் பிடிக்கும்..."

"பிசாசுன்னு சொன்னீங்களே?"

"பூஞ்சையாத் தெரியறாப் பாவம்..."

"உங்க மாதிரியே ஒரு கெட்ட பாட்டிகிட்ட நாலு வருடம் இம்சைப்பட்டிருக்கா..."

"அப்படியாடீ பொண்ணே?"

"இல்லம்மா. எங்க பாட்டி வயசும் சீக்குமா சேர்ந்து கொஞ்சம் கோபப்படுவாங்க... அவ்வளவுதான்."

"டி.வி., பத்திரிகை ஏதும் கிடையாது. வெளியே எட்டியேப் பார்க்கக்கூடாது" மீண்டும் பேசினான்.



"வயசுப் பொண்ணுங்களை அப்படி வளர்த்தால்தான்டா தேவலை. நீ போ" சிடுசிடுத்தாள் பாட்டி.

"நல்ல வேளை நான் வயசுப் பொண்ணில்லை" தோள் குலுக்கியபடி வெளியேறினான்.

"ஆங்... இப்போ சொல்லு உங்கதையை."

"இந்த மாசம்தான் பாட்டி இறந்தாங்க. வேற போக்கிடம் இல்லம்மா. திகைச்சுட்டேன். உங்க விளம்பரம் பார்த்து பக்கத்து வீட்டு வில்லியம் அண்ணாச்சிதான் எழுதிப் போடச் சொன்னாங்க..."

"நிஜமாவா?"

"ஆமாம்மா. எங்க வீட்டுக்குப் பேப்பர் வர்றதில்லையே..."

"ப்ச்... அதில்லடீ. உன் பாட்டி கெடுபிடி அதிகமா–எதுவும் பண்ணாதேன்னா சின்னப் பொண்ணு பொழுதுபோக்க என்னதான் பண்ணினே?"

"டி.வி. கிடையாதும்மா. ரேடியோக்கூட பாட்டிக்கு இம்சையாப்படும் போல அதான். உங்களுக்கு என்ன சாப்பாடு, மருந்து எப்ப எப்பதரணும்னு சொல்லுங்கம்மா. எழுதி வைச்சு நேரப்படி தர்றேன்."

"தா...தா... ஆனா நான் அத்தனை சீக்காளி இல்லை. கொலஸ்ட்ரால் நிறைய. நடந்தா மூட்டு 'கடபுட'ங்கும். ஒத்தாசை வேணும். முதல்ல இன்னைய தினத்தந்தியை எடுத்து செய்தியெல்லாம் சுடச்சுட படி!"

"இதோ..."

'அடடே... எங்கயாம்?' 'எந்த ஊரிலே?' 'யாரோட கூட்டணி?' என்ற செய்திகளை சுவாரஸ்யமாய் ஆராய்ந்தாள் பெரியவள்.

"பழுக்கலையாம் காட்ராக்ட் செய்யணும். அது வரை கை பின்னலை பார்க்காமலேயே போடலாம் டி.வி. தோராயமாத் தெரியும் சமாளிக்கறேன்."

பாட்டி டி.வி. சீரியலில் ஆழ கமலி அறையை சுற்றி வந்தாள். சுத்தமாகவே இருந்தது.

டீப்பாயில் செய்தித்தாளுடன் கருக்கழியாத மாத, வாரப் பத்திரிகைகள் உற்சாகமாய் புரட்டினாள்.

மதிய உணவு தந்து சில தொடரைப் படித்துக் காட்டினாள்.

"படுத்துக்கறேன் குட்டி. முதுகு வலிக்குது" என்றவளை பற்றி படுக்க வைத்தாள்.

சமையலறையில் சமையல்காரர் பாண்டியை பரிச்சயப் படுத்திக் கொண்டாள்.

இரண்டே நாட்களில் இன்னின்னது செய்ய வேண்டும் என்பது பிடிபட்டது.

பாட்டிக்குப் பிடித்த நிகழ்ச்சிகளுக்கு அட்டவணைத் தயாரித்து நேரா நேரத்திற்கு டி.வி.யைப் போட்டுவிட்டாலே பாட்டிக்கு நிம்மதியாகிப்போகும்.

இரவு பால் தந்த பிறகு, இயல்பாய் காலை அமுக்கிவிட்ட போது பெரியம்மாவிற்குக் கோபம்.

"இதென்னடீ பழக்கம்?"

"எங்க பாட்டிக்கும் பிடிச்சுவிடுவேம்மா."

"அது உறவு. சம்பளத்துக்கு வந்த இடத்தில் நாங்க எதிர்பார்க்கலாமா?"

"நீங்க வற்புறுத்தி செய்ய வைச்சா ஒருவேளை தப்பும்மா. நானாய் விரும்பித்தானே செய்றேன்."

"ம்ம்... மரத்த காலுக்குச் சுகமாகத்தான் இருக்குது."



காலையில் தலைவாரும் முதியவளின் விரல் நடுங்குவதைக் கண்டதும் "சீப்பைத் தாங்கம்மா. நான் சீவிவிடறேன்" என்றாள். "கையை உயர்த்தி இந்த வேலைகூட செய்துக்கலைன்னா தோள்பட்டை எல்லாம் இறுகிடும்..."

"கொஞ்சமாய் கையை வீசி இப்படியே நடங்கம்மா. தலையை நான் சீவிவிடறேன்."

மேலே உப்பித் தெரிந்தாலும் பெரியம்மாவின் கூந்தல் சொற்பம்தான்.

"பின்னிட்டியா... நாலு பின் போட்டு தலையோட குத்து."

"வலிக்காதாம்மா?"

"பின்னே என்ன பண்றது அந்த வாலை... சின்ன குட்டி போல தொங்கவா விட?"

"ஒரு சாண் நீளம்மா. இதைப் பாதியா வெட்டி ஒரு கிளிப் போட்டுவிட்டா சவுகர்யமாய் இருக்கும்."

"சிரிப்பாங்க...ம்ம்...இப்ப யாரு நம்மைப் பார்த்து சிரிக்கறா? சரி வெட்டிவிடு."

"கிளிப் எங்கிட்ட இல்லியேம்மா. ரப்பர் பாண்ட்தான் போடுவேன். அது முடியை இழுக்கும்."

"அந்த பீரோவைத் திற. என் பழைய பொக்கிஷமெல்லாம் அதுல இருக்கு."

"அவரை... கூப்பிடவாம்மா திறக்க?"

"உள்ளே பூதமாடீ குட்டி இருக்குது? இந்தாச் சாவி."

பெரிய ரோஸ்வுட் பெட்டி நிரம்ப விதவிதமான கிளிப்புகள். சில வெள்ளி, சில தங்கத்தில்– வெகு நயமான வேலைப்பாட்டில்.

கூந்தல் நீளத்தை சீராய் குறைத்து மெல்லிய வெள்ளிக் கிளிப்பைச் செருகியவள்–

“ஐய்யோம்மா... ரொம்ப அழகாயிருக்கீங்கம்மா...” குதூகலித்தாள்.

“ம்ம்... வசதியாத்தான் இருக்குது.”

“பத்திரிகையில் நல்ல சிறுகதை இருந்தாலும் வாசிச்சு காமிடியம்மா. வந்ததுல முக்கால்வாசி பொண்ணுங்க வாசின்னு சொன்னதுமே அ்லறிட்டு ஓடினதுங்கத்தான். டி.வி.யில் வர்ற குதியாட்டத்தை மட்டும் சலிக்காம பார்க்குங்க.”

“மாதுளம்பழம் உரிச்சு வைச்சேன். ஜூஸ் போட்டு எடுத்து வரேம்மா இப்ப.”

அன்று மாலை பாட்டியைப் பார்த்த காந்தன் மயங்கி சரிந்தான். அதாவது அப்படி நடித்தான்!

“ஹா! பாட்டி என்ன இப்படி ஸ்டைல் பண்றீங்க? கமலியோட போட்டி போடணும்னு தோணிச்சாக்கும்? பொம்பளைங்கன்னா இதான்... இன்னொரு பொண்ணு அழகாயிருந்தா பொறுக்காது!”

“அடுத்து என்ன ஜீன்ஸா... இல்ல மிடியா; மினியா?”

“சனி! பேச்சைப் பாரு... வசதியா இருக்குதேன்னு வெட்டிகிட்டேன்.”

“அடுத்து உடையும் வெட்டிடலாங்கறேன்.”

“நீ முடி வெட்டி நாளாச்சு போல...? நாளைக் காலையில் நாவிதனை வரச்சொல்லிவிடு.”

“நேரமில்லை.”

“நான் சொல்லிவிடறேம்மா.” உதவியாய் இடை புகுந்தாள் கமலி.

“அப்ப நீயே வெட்டிக்கோ கமலி.”

“ச்சீ... சின்னவளை முடி வெட்டிக்கச் சொல்லலாமாடா? அப்படி சாட்டையாட்டம் பின்னலை இக்காலம் பார்க்க கிடைக்கலியே...”



“கமலிக்கு செச்சர்ஸ் விளையாட கத்துக்கொடுத்தாச்சா?”

“இன்னுமில்லை... நிறைய தொடரை மிஸ் பண்ணிட்டேன். வாசிச்சு காட்டறா. குல்லா பின்ன கத்துக்கறா...”

“பின்னட்டும். இப்ப செக்கர்ஸ்?”

“பலகையை எடுத்து வை.”

அரை மணியில் சைனீஸ் செக்கர்ஸ் விளையாட்டின் அடிப்படையை இருவருமாய் சேர்ந்து அவளுக்குக் கற்றுக் கொடுத்துவிட்டார்கள். அவளாகவே ஒரு காயை நகர்த்தியதும் இருவரும் “சபாஷ்” போட்டனர்.

கமலிக்கும் கண்கலங்கிப்போனது. கிடைத்த வாழ்விற்கு மனமார ஆண்டவனுக்கு நன்றி சொன்னாள்.

பெரியம்மாவிடமிருந்து திட்டும் கிடைக்காமல் இல்லை. ஆனால், ஏனோ அதையெல்லாம் பொருட்படுத்தத் தோன்ற வில்லை. நயந்து நடந்தாள்.

நான்காம்நாள் வந்து பரிசோதித்த டாக்டர், “பரவாயில்லையே பி.பி. கட்டுப்பட்டிருக்கு. முகம் கூட தெளிஞ்சிருக்குது” என்றார் திருப்தியாய்.

“என்னைக் கத்த விட்டாத்தானே இந்த குட்டி? எள்ளுங்கறதுக்கு முன்னே எண்ணையை நீட்டிடுறா...” சிரித்தாள் பெரியம்மா.

“இதுதான் புதுசா உதவிக்கு வைச்சிருக்கிற பொண்ணா?”

“பேரு கமலி. வெளிரித் தெரியறா டாக்டர்.”

“துரத்திவிடுங்க... வெளியே காலார நடந்துட்டு வரட்டும். இந்த வயசுக்கு அதுதான் மருந்து.”

மாலை காபியானதும் பெரியம்மா அவளை கிளப்பினார்கள். “நாலரை, ஐஞ்சு மணி வரை நடந்துட்டு வா குட்டி.”

"வாசிக்கறேம்மா."

"அதை வெளியே உக்காந்து வாசி. பூஞ்சக் காளானாட்டம் இருக்கிற வயசா இது?"

"நீங்களும் காத்தாட வெளியே நடக்கலாமேம்மா...?"

"என் உடம்புக்கு ஒத்துக்காதே... கண்ட அலர்ஜியும் உண்டு. காத்திலே உக்காந்தா அடுக்கடுக்கா தும்மல் வரும். பிறகு மார்ச்சளி வரை போகும். அதான் அடைஞ்சு கிடக்கறேன். நீ போ."

"உங்களுக்கும் ஏதும் தேவைன்னா...?"

"கழிப்பறை அறையோடத்தான். நீ தைலம் தேய்ச்சு காலு பிடிச்சுவிட்ட பிறகு மூட்டு வலிகூட தேவலை. நான் நடந்துக்குவேன். போ போ..."

ஆனால், வெளியே வந்தவளுக்கு எங்கே போவது என்பது தெரியவில்லை. சோமு வீட்டைக் காலையில் தட்டிப் பெருக்குவதோடு- தோட்டமும் அவன் பொறுப்பில்தான் என்பது தெரியும்.

முப்பது வயதிருக்கும் சோமுவிற்கு. அவன் குடும்பமும் அருகேதான் குடியிருக்கிறது. இதுவரை அதில் யாரையும் பார்த்ததில்லை. இப்போதும் விசாரிக்க ஆளில்லை.

இடதுபுறம் மாந்தோப்பு. திரும்பி அதன் ஒற்றை அடித் தடத்தில் நடந்தாள். சுகமான பசுங்குளுமை. மரக்கிளைகளில் சின்ன மாம்பிஞ்சுகள் கொத்து கொத்தாய்... குற்றாலத்துக்கே உரிய செண்பகப்பூ வாசனை... மேலும் நடக்க எங்கோ ஓடும் ஓடையின் சலசலப்பும் கேட்டது.

ஆழ சுவாசித்து நடையைத் துள்ளலாக்கினாள்.

"இந்தா... என்ன போக்கு காட்டற. வந்து என் பக்கத்தில் உக்காரு" நெஞ்சு நிறைய இழுத்த நறுமணக் காற்றை மறந்து உறைந்து நின்றாள் கமலி.



அதட்டிய ஆண் குரலைத் தொடர்ந்து சருகுகளில் இருவர் ஓடும் காலடி ஓசை...

இறுக முகத்தை மூடிக்கொண்டாள் கமலி.

"யாரு... யாரது? கேக்கறேனில்லே?"

நடுங்கிய விரல்களை விலக்கினாள்.

ஆச்சரிய பாவனையுடன் அவள் எதிரே நின்றவன் ஒரு இளைஞன்.

அலையலையாய் முடியும், உயரமும் நிறமுமாய் சினிமா நாயகன் போல மிடுக்காய் நின்றான்.

## 5

**நா...** நான் கமலி... பெரியம்மாவின் ஒத்தாசைக்கு வந்திருக்கேன்."

"ஓகோ... வாரம் ஒரு குட்டி ஓடினாலும் மறு குட்டியைப் பிடிச்சு கூட்டிட்டு வந்துடறாங்கப்பா..."

மவுனமாய் நின்றாள். நெற்றியில் சின்ன சுளிப்பு.

"ஓ... குட்டின்னது பிடிக்கலையா? தப்பு அர்த்தத்தில் சொல்லலை. பெரியம்மாவோட பேசிவந்த பழக்கம். இந்தக் காட்டில் பொழுதுபோகலை. போயிடறாங்க. பெரியம்மா எப்படியிருக்காங்க?"

"ம்ம்... டாக்டர்கூட உடம்பு தே... தேறியிருக்குன்னார்."

"உனக்கு இங்கே பிடிச்சிருக்கா?"

"ஆமா. நீங்க...?"

இப்படி தான் கேட்டது அவளுக்கே ஆச்சரியம்தான்.

வேட்டு சத்தத்திற்கு ஓடும் முயல் போல பறந்திருக்க வேண்டியவள் நின்று பேசுவது அதிசயம்தான்.

"உங்களை அங்கே வீட்டில் பார்த்ததில்லை. திடீரென்று சத்தம் போட்டீங்களா... பயந்துட்டேன்."

"ஆங்... என் நாயோட பேசிட்டிருந்தேன். பேச்சு துணைக்கு வேற யாருமில்லையே. பேச, விளையாட எல்லாம் அதுதான் அதுவும் இப்ப ஒரு காட்டுப் பூனையைத் துரத்திட்டுப் போயிருச்சு..."

"தனியாத்தான் இருக்கீங்களா?"

"ஒண்டிக்கட்டை... மிஞ்சின நேரத்தில் நாய் நரியோட பேசிக் கழிக்கிறேன்."

"எத்தனை வருடமாய் இங்கே இருக்கீங்க?"

"ம்ம... படிப்பு முடிஞ்சதிலே இருந்து இங்கேதான், நெருங்கின சொந்தம், குடும்பம் ஏதுமில்லை வேற வழி?"

சட்டென அவன் மீது ஒரு பரிவு மொட்டுவிட்டது.

அவனுக்கும் இவளை ஒத்த நிலைதான்.

அவர்களிடையே பிறகு பேச்சு இயல்பானது. வளர்ந்தது.

அவன் சீண்டல்களுக்குச் சிரித்தாள். இவன் முதலாளி அல்லவே. தன்னைப் போல யாருமற்ற எளியவன்-ஊழியன்.

"ஐயோ... நாலரை ஆயிடுச்சே... இத்தனை நேரமாவா பேசிட்டிருந்திருக்கோம். நான் கிளம்பணுங்க." புல்தரையிலிருந்து எழுந்தாள்.

"சரி. நானும் கூட வரேன். பேசிட்டே போலாம்."

"ம்ம்...ஓடைச் சத்தம் எங்கேருந்து?"



"வலப்பக்கமாய் திரும்பி ஐஞ்சு நிமிடம் நடக்கணும். தண்ணிதேனாத் தித்திக்கும். நாளைக்கும் இதேநேரம் வருவில்லையா கமலி? கூட்டிட்டுப் போறேன்."

"ம்ம்... நாலைஞ்சு பாதை தெரிஞ்சுது. எதுல போகன்னு தெரியலை. விசாரிக்கவும் ஆளில்லை. தற்செயலா இப்படி வந்தது நல்லதுதான்" சொன்னவளை உற்றுப் பார்த்து புன்னகைத்தான்.

"நன்றி."

"ம்ம்..."

"என்னை சந்திச்சது நல்லதுன்னியே... அதுக்கு."

"ஒருத்தருக்கு ஒருத்தர் பேசிட்டோமில்லையா?"

"அப்ப நாளைக்கு நான் இங்கே காத்திட்டிருப்பேன்."

ஆர்வமாய் அவன் சொன்னதில் கமலிக்குள் படபடத்தது.

இளம் ஆண்பிள்ளையோடு இப்படி தனியாய்... பேசிப் பழகும் இந்த அனுபவம் புதிது.

மறுநாள் காலை எழுந்தவளுக்கு முதல் நினைப்பே அன்று மாலை நேரப் போகும் சந்திப்புதான்! மனம் ஏனோ குதித்தது. கள்ளக்குரலில் பாடியபடி வேலைகளைச் செய்தாள்.

பெரியம்மா மறுபடி இவளை பீரோவுக்குள்ளிருந்த பெட்டியை எடுக்கச் சொன்னாள்.

"ரப்பர்பான்ட் உன் பின்னலை நெருக்கி இழுக்குது. இதிலேருந்து ரெண்டு கிளிப்பை எடுத்துக்கோ குட்டி."

"ஐயோ... வேணாம்மா. பிளாஸ்டிக்னா பரவாயில்லை. இது விலை உசந்ததா தெரியுது."

"எதுவும் பயன்படணும்டி. உள்ளே அடைஞ்சு வெள்ளிக் களிம்பேறிப்போச்சு பாரு. நாமும் நாலு பேருக்கு உபயோகமாய்

இருக்கிறவரைதான், சந்தேகம். உபத்திரமாயிடக்கூடாது. மாசத்துக்கு ரெண்டு மூணு மப்ளர் பின்னறேன். தேவைப்பட்ட வங்களுக்குத் தந்திடுவேன். அடுத்தது உனக்குத்தான்.''

''எனக்கு எதுக்கும்மா?''

''அக்டோபர் மாதம் மழை ஊத்தும். பிறகு மூணு மாதத்துக்கு குளிர் உலுக்கும். தேவைப்படும்...''

''சரிங்கம்மா.''

வற்புறுத்தலுக்காய் ரெண்டு கிளிப்புகளை எடுத்துக் கொண்டாள்.

''இந்தா சாவி. காட்ரெஜ் திறக்கத் தெரியுமா?''

''தெரியாதேம்மா.''

''திறக்கறேன். பார்த்துக்கோ.''

விரிந்த இரும்பு பீரோவுள் பார்த்த கமலியின் விழி, வாய் இரண்டும் விரிந்தன!

அத்தனை அடுக்குகளிலும் உச்சி வரைச் சேலைகள்.

''கேக்கணும்னு நினைச்சேம்மா...''

''வேணும்கறதை எடுத்துக்கோ.''

''சரிங்கம்மா.''

மேலாகத் தொட்டுப் பார்த்தாள். ''எல்லாம் விலை கூடினதாய் தெரியுதே?''

''அவர் இருந்த வரைக்கும் பருத்தி கட்டினதேயில்லை நான். இராத்திரிக்குக்கூட மிருதுவான பட்டுதான். காஞ்சிபுரம் கனக்குதுன்னா பெங்களூர் பட்டு வரும். அதிக ஜரிகை எனக்கும் பிடிக்காது. ஆனா எங்கிட்டே இல்லாத நிறமிருக்காது. இது பெங்கால் பட்டு. மடிச்சா உள்ளங்கைக்குள்ளே மறைச்சுடலாம்.''



''வேற பழசு இல்லியாம்மா? இதை வெட்டித் தைக்க மனசு வராதே...''

''என்னத்துக்குடி வெட்டணும்?''

''உங்களுக்கு ஒரு நைட்டி தைக்கம்மா. அதுக்குத்தான் வேண்டாத சேலை இருக்கான்னு கேக்க நினைச்சேன்.''

''எனக்கெதுக்குடி நைட்டி?''

''சேலையைவிட வசதிம்மா. இப்ப ரவிக்கை போட்டு, உள்பாவாடையை இறுக்கி மேலே சேலையும் சுத்திக்கணும். நைட்டின்னா உள்ளேயும் தரை கட்டலாம்.''

''காந்தன் புது முடி அலங்காரத்தையே இன்னும் சீண்டறான்.''

''அவர் அன்னைக்கு உடையும் வெட்டிடுங்கன்னு சொன்னதும்தான் எனக்கிந்த யோசனை வந்ததும்மா. உங்களுக்கும் வசதி.''

''ஒண்ணு வேணா தைக்கலாம். சோமு சம்சாரத்துகிட்ட சொல்லி டெய்லரை வரச்சொல்லிவிடு. இப்ப சொன்னா மறுவாரம் வருவான் அந்த ஒழுங்கீனம்...''

''நா...நான் தைப்பேம்மா. பின் அறையிலே மெஷின் கிடக்குதே.''

''ம்ம்... யாரும் சீந்தாமக் கிடக்கும்.''

''எண்ணை போட்டு நாலைஞ்சு கிளிசலைத் தைச்சேம்மா.''

''உன் சேலையைச் சொல்றியா?''

''ஊகூம்... என் சேலையைக் கையால் தைப்பேன். சமையல் துண்டு, தலையணை உறை கிழிசலைத் தைச்சேன்.''

''இப்ப நான் பீரோவைத் திறந்தது உன்னை நாலு சேலை எடுத்துக்கச் சொல்லி...''

"ஐயோ... வேணாம்மா. காந்தன் சார் தந்த பணத்தில் இந்தச் சேலை ரவிக்கை எடுத்தேன்."

"வெளிரின மஞ்சள் உனக்குப் பொருத்தமில்லை. மத்ததெல்லாம் கிழிஞ்சிருக்கு. இங்கே இத்தனை கிடக்குதே..."

"இதெல்லாம் உங்களதும்மா. வர்றவங்க போறவங்க எடுத்து கட்ட முடியுமா?"

"சரி. அப்ப நானே நாலு சேலைகளை எடுத்துத் தரேன். விருந்தாளிங்களுக்கு வைச்சு தர ரவிக்கைத் துணி கீழ்தட்டுல இருக்கும். பொருத்தமான நிறங்களை தேடிப் பார்த்து எடுத்துக்கோ."

கண்ணை இடுக்கி நான்கு சேலைகளை உருவி நீட்டினார்கள்.

"இத்தனை நல்லதாய்..."

"உனக்கு நல்லாயிருக்கும்."

"உங்க நைட்டிக்கு?"

"நீயே பார்த்து எடு."

"ஒரு சேலைக்கு ரெண்டு நைட்டி வரும்மா."

"தை பார்ப்போம். நல்லாயிருந்தா மாத்தி மாத்தி போட்டுக்குவேன்."

"மிஷினை பக்கத்து அறையில் கொண்டு வந்து போட்டுக்கட்டும்மா? இராத்திரி தைப்பேன். நீங்க குரல் கொடுத்தாலும் கேட்கும்."

"செய்யி. ஏதோ தடாபுடான்னு சத்தம் கேட்டாத்தான் வீடு வீடாயிருக்குது."

அதிக நடமாட்டம் இல்லை. எனினும் வீட்டுக் கணக்குகளைக் கவனிப்பது பெரியம்மாதான்.



அன்றைய சமையல் அவர்கள் சொல்படிதான். காந்தன் சொல்லும் வியாபாரம், தோட்டம் பற்றிய விபரங்களையும் கவனமாய் கேட்டு கருத்து சொல்வார்கள். உலக நடப்புகளும் தெரியும். ஆக அவரோடு பேசிப் பழகுவது இளையவளுக்கு சுவாரஸ்யமாய் இருந்தது.

சலிக்காமல் ஓடி ஓடி வேலை செய்யும் சின்னவளை, தன்னலமில்லாத உழைப்பவளை மனதுக்குள் மெச்சிக் கொண்டாள் மூத்தவள்.

அன்று மதியமே நைட்டியைத் தைத்து கழுத்துக்கு இரண்டு முத்து பட்டன்களை வைத்தாள்.

ரோஜா நிற காஷ்மீர் பட்டு. சின்னப் புள்ளிகளும் பூக்களுமாய் எளிய டிசைன்.

"போட்டுப் பார்க்கறீங்களாம்மா?"

"அடடே... அழகாகத்தான் வந்திருக்குது."

போட்டதும் பாட்டி பெரிய மலர் போல... சற்றே தொய்ந்து வாடிய ரோஜா பூப்போல இருந்தாள்.

"டிரஸ் போட்டது போலவே தெரியலடீ..." தொட்டு தொட்டு சிரித்தாள். "வெளியே போயிட்டு வந்தபிறகு உன் முகம் பளிச்சுனு தெரிஞ்சது. தினம் கிளம்பிடு."

"ஆகட்டும்மா."

"எந்தப் பக்கம் போனே?"

"மாந்தோப்புப் பாதையிலே."

முதியவளின் முகம் சற்று சுணங்கியதோ?

"ஓடைப் பக்கமாவா?"

"அதுவரைப் போகலைம்மா."

“இன்னைக்கு மறுபக்கம் போ. நல்லதா உடுத்திட்டுப் போ.”

“சரிகை இல்லைன்னாலும் நயமான பட்டுக்களைக் கொடுத்திருக்கீங்கம்மா. இதோட வேலை செய்ய பயமாயிருக்குதே?”

“மறுமுறை காந்தன் நெல்லைக்குப் போறச்சே நீயும் போ. நாலு நைலக்ஸ் எடுத்துக்கோ. துவைச்சு கட்ட தோது. இதை விசேஷ நாளுங்களுக்குக் கட்டிக்கோ.”

“இருக்கறது போதும்மா... இங்கே யார் பார்க்கறா?”

“நான் மனுஷியாத் தெரியலியா? அரைக் குருடின்னு பார்க்கறியா?” “ச்சோ... இல்லம்மா. அவசியமான்னு?”

“கண்ணெதிரே பொண்ணுங்க நல்லபடி உடுத்தி நடமாடறது ஒரு குஷி. ஆங்... கேட்கணும்னு நினைச்சேன். காலையிலே நீயா சட்னி அரைச்சே?”

“ஆ... ஆமாம்மா. நீங்க வேணாம்னா இனி நான் சமையல் பக்கம் போகலை.”

“போ... போ... ஒரு துண்டு இஞ்சி, பூண்டு சேர்த்து அரைச்சிருந்தே. நாக்கு ருசியாயிருந்ததுச்சு.”

“நாளைக்கு புதினா சேர்க்கட்டுமாம்மா?”

“நொய் நொய்யுனு கேக்காதே. எதையோ செய்.”

அன்று மாலை பிரபாகருடன் ஓடை வரைப் போய்விட்டு திரும்பியபோது மணி ஐந்தைத் தாண்டிவிட்டது. மாமர நிழலில் ஓடை நீரை அளைந்தபடி பேசியதில் நேரம் நழுவியதே தெரியவில்லை.

அவன் மூச்சுக்கொருமுறை ‘கமலி’ என்று பெயர் சொல்லி அழைத்ததில் நெகிழ்ந்திருந்தாள். அதிலொரு நெருக்கம் உண்டாகி யிருந்தது.

அவளைப் பற்றி அதிகம் கேட்டான்.



அதுவரைப் பகிர ஆளில்லாதவள் கொட்டினாள். அவன் கவனமாய் உள்வாங்கிக்கொண்டது திருப்தியாய் இருந்தது.

அவனது நாய் இருவரையும் சுற்றிச் சுற்றி ஓடியது. அவ்வப்போது குலைத்தது.

“ஜாக்கி... வாயை மூடு...”

“ஐயோ... நேரமாச்சுது பிரபாகர். போகணும்...”

“நானும் வீடு வரை வரேன்.”

தோப்பு விளிம்பிற்கு அவர்கள் வந்தபோதுதான் காந்தனின் காரும் வந்தது.

“வரட்டுமா?”

இவள் ஓட்டமாய் வாசலை நெருங்கினாள்.

காரிலிருந்து இறங்கிய காந்தனின் பார்வையில் வழக்கமான உல்லாசமில்லை. உறுத்தியது.

## 6

“மன்னிச்சுடுங்க சார்... நேரமாயிடுச்சு.”

“ஒவ்வொரு நிமிடத்துக்கும் நான் கணக்கு கேட்கலியே...”

குரலில் புதிதாய் ஒரு கடுமை.

“நாலரைக்கு வந்திருக்க வேண்டியது...”

“ஊகூம்...?”

காரைப் பூட்டியவன் நடக்க, இவளும் வீட்டிற்குள் ஓடினாள்.

அன்றிரவு உணவிற்குப்பின் வழக்கம் போல செக்கர்ஸ் விளையாடினார்கள். காந்தன் பேச்செடுத்தான்.

"ஏன் கமலி...? அரை மணி நேர தாமதத்துக்கு ஏன் அப்படி வேட்டை நாய் துரத்தற முயல் மாதிரி ஓடிவந்தே?"

"ஓடிவந்தாளா? அதான் கன்னமெல்லாம் சிவந்து பளபளன்னுது. ஸ்கிப்பிங் கூட நல்லது குட்டி. குதிச்சு ஆடு."

"கன்னம் சிவந்ததுக்கு வேற காரணம் பாட்டி."

"என்ன சிலுமிஷம் செய்தே?"

"நானில்லை."

கமலியின் அஞ்சி, கெஞ்சிய பார்வையில் மனமிளகினான் போலும். பேச்சை மாற்றி, "உன் அத்தை, பாட்டிக்கு ரொம்ப பயப்படுவியா?"

அவளை மூன்று வயதுக் குழந்தையாய் பாவித்து கேட்டான்.

"இல்ல... கொஞ்சம் பயம்... ஆனா பிடிக்கும்."

"விட்டுக் கொடுக்கமாட்ட? அதென்ன பிரியமா? விசுவாசமா?"

"அதான்டா பொண்ணுங்க. பொல்லாத புருஷனையே பொறுத்துக்கறது அதனால்தான்!"

"பெண்டாட்டிகளைப் பொறுத்துக்கற புருஷன்களைப் பார்த்து அனுதாபம் காட்ட மாட்டீங்களா?"

அன்று விளையாட்டில் கமலி பரிதாபமாய் தோற்றாள்.

"புத்தி இங்கில்ல. ம்ம்...?" அவன் பார்வை சுண்டியது!

மறுநாள் சமையல்காரர் பாண்டி காய்ச்சல் என்று அனத்திய படி படுத்துவிட கமலி உப்புமா கிளறினாள். துணைக்கு புதினா சட்னி. மேஜையில் அமர்ந்த காந்தனுக்குப் பரிமாறினாள்.

"பிரமாதம்!"

"...."



"பெண்களுக்கு பொறுமையோட, கைமணமும் வாய்சிருக்குது. ம்...?"

"...."

"பதில் பேசக்கூடாதா கமலி?"

"தாங்க்ஸ்."

"பிரபாகரோட நேரம் போறது தெரியாம பேசிட்டு வரே. எங்கிட்ட மட்டும் என்ன பயம்?"

உள்ளே 'சுள்' ளென்றது.

"அவர் மானேஜர்னாலும் என்னைப் போல ஒரு ஊழியர்- நீங்க முதலாளி. அதான்..."

புருவம் சுருக்கினான்.

"அப்படிச் சொன்னானா என்ன?"

"இ...இல்ல...நானாத்தான்..."

"தான் மானேஜர்னு சொன்னானா?"

"இல்லை... எல்லாம் நான் பார்த்துக்கறேன்னார்."

"ஆளும் அழகு. சிரிக்கச் சிரிக்க பேசியிருப்பான்..."

இதற்கு பதில் சொல்லித்தான் ஆகவேண்டும் போலிருந்தது.

"வேலைக்காரங்க அழகாய் இருக்கிறதும், ஒருத்தருக் கொருத்தர் இயல்பாய் பேசறதும் தப்பா?"

"யார் எப்படிப் பேசினால் என்ன அர்த்தம்னு உனக்குப் புரியுமா?" அழுந்தக் கேட்டான்.

"அப்படித்தான் நினைக்கிறேன்" என்றாள் இவளும் அழுத்தமாய்.

வேலையின் நேர்முகத் தேர்வுன்னு காந்தன் ஒரு பெண்ணிடம் சிரித்து சல்லாபமாய் பேசியதை மனதில் வைத்து

தான் அந்தப் பதில் தந்தாள். ஆனால் சொன்னபிறகு அப்படித் துடுக்காய் பேசியது தப்பு எனப்பட்டது. அப்படி சொன்னதால் தானே அவனும் பதிலடித்தான்.

"நினைக்கறது வேறு... தெரிஞ்சுக்கறது வேற... ஆழம் தெரியாம நீந்த இறங்கிடாத கமலி. வந்து 10 நாள்தான் ஆச்சு... அதுக்குள்ளே பிரபாகரைக் காதல் பண்ண ஆரம்பிக்காதே... பொறு..."

அவள் அதிர்ச்சியிலிருந்து மீளும் முன்பாகக் கிளம்பி விட்டான். அன்று அத்தனை வேலையிலும் தடுமாறினாள்.

ஏனோ அழுகை முட்டியது.

அன்று மாலை அவள் தேர்ந்தெடுத்தது வேறு பாதை.

சீக்கிரமே வீடு திரும்பி பாண்டிக்கு ஒத்தாசையாய் நின்றாள்.

"நீ கசாயம் வச்சு தந்ததுலதாம்மா என் மேலுக்குக் கொஞ்சம் தேவலை..."

"படுங்க... நான் பாத்துக்கறேன்."

"உடம்பு அசத்துதுன்னு முன்னே இங்கேயிருந்த ஒண்ணு ரெண்டு பேரை ஒத்தாசைக்குக் கேட்டேன்.நாங்க கரண்டி பிடிக்க வரலை... பெரிசைப் பாக்கறதே போதும்னு முறுக்கிச்சுங்க..."

பருப்பு, தேங்காய் துருவல், வெந்தயம், சீரகம், பூண்டு சேர்த்து சாதத்தை பால் கஞ்சியாய் காய்ச்சினான்.

"அம்மாவுக்கு இது நல்லது... உங்களுக்கும்தாண்ணே..."

பெரியம்மாவிற்கு கஞ்சி பிடித்திருந்தது.

"பல்செட் வாய்க்கேத்த கஞ்சி... மென்னு குடிக்க இதம்... காந்தனுக்கென்ன சமைச்சே...?"

"தோசை ஊத்திக்கலாம்மா..."



தினம் படுப்பதற்குமுன் பெரியம்மாவை நடக்கச் செய்து, தைலம் தேய்த்து நீவி விட, நடமாட்டம் கூடியிருந்தது. வீட்டு வேலைகளையும் இழுத்துப் போட்டு செய்தாள்.

மறுநாளும் கமலி ஓடைப்பக்கம் போகவில்லை. மூன்றாம் நாள் காலை பிரபாகரை இந்த வீட்டு வாசலில் பார்த்ததும் உதறியது.

"பெரியம்மாவைப் பார்க்க வந்தீங்களா?" குழறலாய்க் கேட்டாள்.

"ம்ம்... குட்டியம்மாவை... ஏன் ரெண்டு நாளாக் காணலை?"

"வேலை இருந்துச்சு..."

"வேற பக்கம் போனாய் போல?"

"அங்க லேட்டாயிடுது... அதான்..."

"காந்தன் திட்டினானா?"

"சம்பளம் தர்றவரை... அவன் இவன்னு நாம பேசறது... தப்பு?" அதுவரை முறுவலித்த பிரபாகரது முகம் இப்போது முறுகியது.

"உன்னைப் பாக்கவிடாமல் செய்த கோபம்... வேறென்ன?"

"இன்னைக்கு வரமுடிஞ்சா வர்றேன்..."

"என் வீட்டுக்கு வரணும் கமலி..."

"எங்கே இருக்குது?"

"ஓடைப் பக்கத்திலதான்... சின்ன ஒற்றை அறை... வந்து ஒரு கப் காபி குடிக்கணும்..."

அவன் அங்கிருந்து போனால் போதும் என்ற பரபரப்பில் தலையாட்டினாள்.

"சரி வரேன்..."

சிரித்தபடி கையாட்டிவிட்டு அகன்றான்.

அன்று வண்ணான் வரவும், அத்தனை விரிப்பு, துவாலைகளை மாற்றினார்கள். கணக்கெடுத்தாள்.

இளநீல காசிப் பட்டைக் கட்டிக்கொண்டாள். கருநீலச் சோளி.

சேலையின் கருநீலத்தில் விரல் அளவு சரிகைக் கரைதான். ஆனால் பட்டு ஒருத்தர் தோற்றத்தை, அந்தஸ்தை 'பட்'டென்று உயர்த்தியும் காட்டுகிறது.

15 நாட்கள் நல்ல உணவும், மனநிம்மதியும் வெளிக் காற்றுமாய் சேர்ந்து அவள் மேனியில் தனி சோபை ஏற்றியிருந்தன.

பெரியம்மாவை முதலில் நமஸ்கரித்தாள்.

"எழுந்திரி குட்டி... நல்லாயிரு... என்ன விசேஷம்?"

"முதன் முறையாய் பட்டுக் கட்டியிருக்கேம்மா..."

"அம்சமாயிருக்கே...இப்படி சாயங்காலப் பொழுதில் ஒவ்வொன்னாக் கட்டு. அடுத்த அறையில் பட்டன் ரிப்பனெல்லாம் இருக்குமே..."

"உங்கள் உல்லன் நூல் இருக்கற அலமாரியிலா...?"

"ஆம்மா... அதுல கண்ணாடி வளையலுங்க குமிஞ்சு கிடக்கும்... பொருத்தமா எடுத்துப் போட்டுக்கோ... கலகலன்னு வளைய வா..."

"சரிங்கம்மா..."

தூசி படிந்திருந்த வளையல்களைத் துடைத்து அடுக்கினாள். நீலப் பட்டு வளையல்களைக் கழுவி எடுத்துப் போட பளபளவென்று அவை அவளிடம் ஏதோ பேசின.

தான் நேர்த்தியாய் உடுத்தியிருக்கும் உணர்வேகூட பெண்ணிற்கு அழகுதான். அவள் நடையில் ஒரு துள்ளல் தொத்திக்கொண்டது.



"எங்கம்மா போறீங்க?"

மறித்தாற்போல நின்ற சோமுவை ஆச்சரியமாய் பார்த்தாள்.

"சும்மா... வழக்கம்போல நடந்துட்டு வரத்தான்..."

"இந்தப் பாதை வேணாம்மா..."

"ஏன்... ஏன் சோமுண்ணா?"

"சுளுவா... பாம்பு நடமாட்டம்னுடுவேன். ஆனால் நம்ப அய்யாவுக்குப் பொய் சொன்னால் பிடிக்காது."

புரியாமல் நின்றாள்.

"நீங்க தோப்புப் பாதையில் போகாமல் பார்த்துக்கச் சொன்னாரு..."

குப்பென முகத்திற்கு இரத்தம் ஏறியது.

"ஏன்... ஏதற்கு?"

"அய்யா உத்தரவும்மா... அப்படிப் போங்க. நாலைஞ்சு செம்பகமரமிருக்கும்... பூவைத் தொடுத்து வைச்சுக்கலாம்."

"பரவாயில்லை... நான் வெளியேப் போகலை."

விருட்டென வீட்டிற்குள் போனவள், தன் அறைக்குள் அடைந்து கொண்டாள். இது வேறுவிதமான அவமானம்!

முன்பு அத்தைப் பாட்டியின் திட்டுக்கள் நேரடியாய் தாக்கும்.

இது எதிர்பாராத குத்து... அதிர்ச்சியான வலி.

தலையணையைக் கட்டியபடி அழுதாள். பத்து நிமிடங்களில் முகம் கழுவிக்கொண்டு வேலைகளில் இறங்கினாள். வேலைக்காரிக்கு இதைவிட சாவகாசமாய் அழ உரிமை கிடையாது என்ற குரோத எண்ணத்துடன். "இன்னைக்கு சீட்டு போடலாமா பாட்டி?"

"ம்ம்... ஐஞ்சு, மூணு, ரெண்டு ஆடலாம். கமலிக்குச் சொல்லிக் கொடு..."

அங்கிருந்தது நழுவப் பார்த்தவளை, "உட்காரு கமலி..." அழைப்பால் இழுத்தான்.

"இல்ல சார்... எனக்கு தலைவலிக்குது."

"நினைச்சேன் குட்டி கண்ணு சிவந்திருக்கோன்னு..."

"புதுச்சேலைக்குப் பொருத்தமாய் இருக்கட்டுமேன்னு ஏதோ பூசியிருக்கலாம்!"

"டேய்... கண்ணுக்குள்ளே சிவப்பு மையா பூசிப்பாங்க? என்னடி கமலி?"

"தலைவலிதாம்மா..."

"படு போ..."

"முதல்ல உங்களுக்குப் பாலை எடுத்திட்டு வரேன்ம்மா?"

"அதெல்லாம் காந்தன் தருவான்... நீ போ..."

அதற்குமேல் நின்றால் அம்மாவுக்குக் கோபம் வரும். ஆகக் கிளம்பினாள்.

சமையல் அறை அலமாரியை ஒதுங்க வைத்து, டின்களில் மசாலா சமான்களின் பெயர்களை எழுதி ஒட்டிக் கொண்டிருக்க, காந்தன் வந்தான்.

"நினைச்சேன்... படுக்கமாட்டேன்னு..."

"ஏதும் வேணுமா சார்...?"

"ஆமாம் ஒரு சிரிப்பு மட்டும்!"

தலைகுனிந்தாள்.

"பிரபாகரைப் போய் பார்க்க வேண்டான்ன கோபம்... இல்லை?"

"நீங்க நேரடியாச் சொல்லியிருக்கலாம். சோமு அண்ணா மூலமாய்..."



"ஒத்துக்கறேன். ரெண்டு நாளாய் நீ ஓடைப் பக்கம் போகலை. சரி, இனி போகமாட்டே. ஏன் வீணாய் கலவரப் படுத்தணும்னு விட்டுட்டேன். ஆனால் உனக்கு ஒரு காவல் தேவைன்னும் தோணிச்சு..."

"அதான் சங்கடமாயிருந்தது..."

"சின்னப்பொண்ணு சங்கடத்தில் மாட்டிக்கக்கூடாதுங்கற நல்லெண்ணம்தான்."

"நா...நான் சின்னப்பெண்ணில்லை..."

"உலக அனுபவமில்லையே... நாலு சுவருக்குள்ளே நாலு வருடத்தைக் கழிச்சிருக்கற..."

"சரி சார்... இனிப் போகலை..."

"அ...ஆங்... இவ்வளவு மிடுக்காய் பேசத் தெரியுமா? வழக்கமாய் மென்னு முழுங்குவே?"

பல்லைக் கடித்து பதிலை விழுங்கினாள்.

மறுநாள் காலை பாட்டியின் அறையிலேயே உணவை முடித்தவன்-

"கொஞ்சம் கடிதமெல்லாம் தரேன் கமலி... டைப் செய்து அனுப்பிடு" என்றான்.

"அடடே, கமலிக்கு டைப்பிங் தெரியுமா?"

"விண்ணப்பத்திலே அப்படித் தான் குறிப்பிட்டிருந்தது."

ஓரக்கண்ணால் அவன் தன்னைப் பார்ப்பது புரிய,

"சரி சார்" சம்மதித்தாள்.

"ஏன்டா உன் ஆபீசுலதான் கம்ப்யூட்டர் வைச்சிருக்கியே... பிறகென்ன?"

"அதிலே அடிக்கவேண்டியது நான்தானே... குமார்கிட்ட சொல்லி எழுதச் சொன்னேன்... அவன் கையெழுத்து ஒரேக்

கிறுக்கல்... கமலி டைப் பண்ணட்டும். தவிர நிறைய பிரீடைம் இருக்குபோல... என்ன செய்யன்னு தெரியாம திண்டாடறா... தப்பு தண்டாவுக்குப் போகாம டைப் அடிக்கட்டுமே..."

கடைசி வாக்கியத்தைக் குரல் தணித்து சொன்னான். கமலி குறுகிப் போனாள். இதென்ன அக்கிரமம்?

ஒருநாள் பிரபாகருடன் பேசியபடி வந்ததைப் பார்த்தவனுக்கு ஏன் இந்த அநாவசிய ஆத்திரம்?

ஏதோ பிரபாகர் ஒரு முதலை போலவும் இவளை அதன் கோரப்படியிலிருந்து காப்பாற்ற முனைபவன் போல ஏன் இந்த நாடகம்?

"வரேன் பாட்டி..."

சின்னக் கையாட்டலுடன் கிளம்பியவனைத் தொடர்ந்தாள்.

"மன்னிக்கணும் சார்... நான் டைப் பண்ண... முடியாது!"

"ஏன்? இன்னைக்கு மருதாணி இட்டுக்கப் போறியா?"

"அம்மாவை கவனிக்கத்தான் என்னை அழைச்சீங்க."

"தைக்கறே... சமைக்கிறே... பாட்டிக்குப் பிடிச்சாப்பல அலங்காரம் கூட செய்துக்கறே... இதுவும் செய்யலாமே?"

"இல்ல..."

இடைவெட்டினான்.

"செய்யறே... சொல்றதைச் செய்யத்தான் உனக்கு இங்கே சம்பளம்..."

விக்கித்து நின்றாள்.

அவன் திரும்பியும் பாராமல் போய் விட்டான்.



## 7

நத்தையாய் சுருண்டு போனவளை பெரியம்மாவின் கண்கள் கவனிக்கத் தவறவில்லை.

சிரிப்பு, பேச்சின்றி பதுமையாய் வளைய வந்தவளைக் கவலையாய் பார்த்தாள்.

"இருபது நாளிலே தேறினே... இப்ப மறுபடி வாடித் தெரியறே?"

"அப்படியாம்மா?"

"வேலை ஜாஸ்தியா? டொக் டொக்னு டைப் வேற பண்றே..."

"அதுக்குத்தானேம்மா சம்பளம்..."

"இந்தா துடுக்காப் பேசாதே!"

"மன்னிச்சிருங்கம்மா... சார் சொன்னதைச் சொன்னேன்."

குரல் தழுதழுப்பதை மறைக்க முடியவில்லை.

"அப்படியா சொன்னான்... அந்தப் பயல்? அதான் ஒடுங்கித் தெரியறே..."

"இல்லம்மா..."

"பீரோ மேல்தட்டிலே ஆல்பம் இருக்கும்...எடுத்திட்டு வா..."

எடுத்துத் தந்தாள்.

"நீ பார்க்கத்தான்... இப்படி உக்காரு..."

அவளைத் திசைமாற்ற பெரியவள், செய்த முயற்சி நெகிழ்த்தியது.

ஒவ்வொரு பக்கமாய் புரட்ட நிஜமான ஆர்வத்துடன் ஒன்றிப் போனாள்.

“இதான் பெரிய அய்யாங்களாம்மா? உங்களுக்குப் பொருத்தமாய் இருக்காங்க...”

“அவருக்கு நான் பொருத்தம்னுவேணா சொல்லு...”

“வெளியே அய்யா படமே இல்லையேம்மா...”

“ப்ச்... சதா அவரைப் பார்த்தா... இங்க ரொம்ப சூன்யமாத் தோணுது. அதிலேயும் படத்துக்கு மாலை போட்டு பாக்கற சக்தியில்லை எனக்கு. அவர் வெளியூர் போயிருக்கிறதா என்னையே ஏமாத்திக்கறேன் குட்டி...”

கமலியின் கண்கள் பனித்தன.

“அ... இதான் காந்தனோட அம்மா...”

“அதாவது உங்க பொண்ணு...”

“இல்லடீ... எனக்கு உறவுதான் விமலா... ஆனால் மகளில்லை...”

இந்தச் செய்தி கமலிக்குப் புரிபட சற்று நேரமானது.

“அப்ப உங்க பிள்ளைங்க...?”

“அந்த பாக்கியமில்லை எனக்கு... தங்கமான புருஷன், வளமான வாழ்க்கையெல்லாம் கொடுத்தாச்சு... இவளுக்கு இது போதுன்னுட்டார் கடவுள்...”

“அப்போ... காந்தன்?”

“தத்தெடுத்தோம் கல்யாணமாகி 32 வருடம் கழிச்சுதத் தெடுத்தோம் இவனை. எங்களுக்குப் பிறகு இந்தப் பெரும் சொத்து தர்மத்துக்குத்தான்னு முதல்ல நினைச்சோம்... இவனைப் பார்க்கிறவரை... அகாலமா அவன் அம்மா இறந்ததும் அநாதையாக் கிடந்தான் இந்தப் பச்சப்பிள்ளை. இவரும் நாளைக்கு உனக்குன்னு சொல்லிக்க ஒரு பிள்ளை வேணும்னு இவனை தத்து எடுத்துக்கிட்டார்...உறவெல்லாம் கூட்டி அவனை எங்களவனா ஏத்துக்கிட்டோம். இருபத்தொன்னு பூர்த்தியானதும் சொத்தையும் காந்தன் பேரிலே எழுதியாச்சு.... இருந்ததை விருத்தியாக்கினான்... என் ஆயுசையும் விருத்தியாக்கினது அவன்தான்... இல்லைன்னா நான் அவரில்லாமல் இத்தனை வருடம்...?”



“அப்படின்னா ஏம்மா பாட்டீங்கறார்?”

“வயசு வித்தியாசம் அப்படி.... ஐம்பது வயசானவளை ஒரு குழந்தை வேறெப்படி கூப்பிடறது?”

“ம்ம்... இங்க பிரபாகர்னு ஒருத்தர் வேலையில இருக்காரே...”

பெரியம்மாவின் கண்கள் கடுத்தனவோ?

“பார்த்தியா அவனை?”

“தோட்டப்பக்கமாய் போனபோது... பார்த்தேம்மா...”

“அவனும் உறவுதான்னு சொல்லியிருப்பானே!”

“ஆமா... சொன்னார்...”

“தூரத்து உறவு. அவன் அம்மா படம் கூட இதுல இருக்கும். அவன் சாது. பிரபாகர் அவன் அப்பாவைக் கொண்டிருக்கணும்...”

“நல்லவராத்தான் தெரிஞ்சாரும்மா...”

“அவ்வளவுக்குப் பழகியாச்சா?” அதட்டலில் ஒடுங்கிப் போனாள் கமலி.

ஏன் இவர்களுக்குப் பிரபாகரைப் பிடிக்கவில்லை?

அவள் விழிகளின் கேள்வி புரிந்ததுபோல-

“அவனுக்கு வீணாய் காந்தன் மேல பொறாமை...” விளக்கினாள்.

‘காந்தனுக்குத்தான் அனாவசியமாய் பிரபாகர் மேல் பொறாமை’ என்று சொல்ல நினைத்ததைச் சொல்லவில்லை, அவள்.

“தன்னைத் தத்தெடுக்காமல் காந்தனை எடுத்துட்டோங்கற பொருமல்... வேறென்ன? அவன் குடும்பமும் நசிஞ்சிடுச்சு... அவன் படிப்புக்கு பொறுப்பெடுத்துகிட்டோம்... ஆனால் அவர் அதாவது என் கணவர் சொன்னது காந்தனைத்தான்... யாருமில்லாமல் கிடந்தானே... இதில் பிரபாகர் என் அம்மாவுக்கு கடைசிவரை வருத்தம்...”

“அதெப்படி அவங்க உயிரோட இருக்கையில் பிள்ளையைத் தத்து கொடுப்பாங்க?”

“எல்லாம் பண ஆசைதான். பெரிய சொத்து, வீடு எல்லாம் தன் பிள்ளைக்கு வருமே... அவன் வசதியாய் வாழ்ந்தால் போதுங்கற ஆதங்கம். அதை அவள் சொல்லிச் சொல்லி பிரபாகருக்குள்ளே எரிச்சலை வளர்த்துவிட்டுட்டா... அவனும் ஏதோ தான் மிராசு வாரிசுங்கற ஜம்பத்தில் திரிஞ்சான். இப்ப அவள் இல்லை... இன்னும் இவனுக்கந்த எரிச்சல் தணியலை...”

கமலிக்கு நம்பமுடியவில்லை-பெரியம்மாவும் பிரபாகரை மட்டம் தட்டுவது வருத்தம் தந்தது.

“ரெண்டு பசங்களும் ஒரே ஸ்கூல்லதான் படிச்சாங்க... பிரபாகருக்கு படிப்பிலே ஆர்வமில்லை. ஆக அதுவும் வரலை. அவன் எதிர்பார்த்த மாதிரி வேலை அமையலை... வெளியே சிரமப்பட வேண்டாம்னு இங்கேயே இருக்கச் சொல்லியாச்சு... ஏதோ நம்மால ஆனது...”

ஆக காந்தன் பெரியம்மாவின் சொந்தப் பேரன் இல்லை. எத்தனை அருமையாய் பழகுகிறார்கள்... எல்லாம் மனசுதான் போல... ஒருவேளை காந்தனுக்கு இதெல்லாம் தெரியாதோ? எண்ணிய மறுகணமே உதறிக்கொண்டாள்.



வேலைக்குச் சேர்ந்த தன்னிடம், காந்தனுக்கேத் தெரியாத உண்மையைச் சொல்லுவார்களா...என்ன?

“எங்கிட்டே ஏம்மா இதெல்லாம் சொல்றீங்க?”

தானுண்டு தன் வேலையுண்டு தினுசில் இருப்பது கமலிக்கு அத்தனைச் சிரமமாயில்லை.

இரண்டு மாதங்கள் இறக்கைக் கட்டிய மாதிரிப் பறந்து மறைந்தன.

ஒரு நாள் பெரியவள் சலித்தாள்.

“என்னடி குட்டி... இப்படியொரு பொண்ணா?”

“என்னங்கம்மா?”

“வெளியே போய் நாலு இடம் பார்க்கணும்னு இருக்காதா? இதோ இருக்கற அருவியில் கூட போய் ஒரு குளியல் போடலியே நீ?”

“தனியா எப்படிம்மா போறது? தவிர பொது இடத்துல குளிச்சு.. பழகலீங்கம்மா...”

“அவர் இருக்கையிலே ஒரு நாள் விட்டு மறுநாள் அருவிலதான் குளிப்போம். எந்த வெளியூர் போனாலும் கூடவே ஒட்டிக்குவேன்... இப்பத்தான் முடியலை... இல்லைன்னா உன்னை அழைச்சுட்டு போயிருப்பேன்...”

“இங்கேயும் வேலை சரியா இருக்கேம்மா?”

“அப்படி என்னடி... பிழிஞ்செடுக்கறேன்?”

“ஐயோ... அப்படியில்லம்மா... எங்க போறது... அதுக்கு தேவையுமில்லையே...”

“மேஜை விரிப்பு வேணும்னியே?”

"பாப்ளின் துணி இருந்தால் தாங்க... பூவேலை செய்து மேஜைகளுக்கு விரிக்கலாம்னேன்..."

"எங்கிட்ட இல்லை. போய் வாங்கேன்."

"சரிம்மா... ஒருநாள் இங்க கடைத்தெரு போய்..."

"துணி வகைகள் திருநெல்வேலி டவுன்ல நல்லதாய் கிடைக்கும். அப்படியே எனக்கும் கொஞ்சம் வேலையிருக்குது..."

"அதை முன்னமே சொல்லியிருந்தா.. போயிட்டு வந்திருப்பேம்மா..."

"நைந்த ஜரிகைக் கரையெல்லாம் கிழிச்சு வைச்சு ஒரு வருடத்துக்கு மேலாச்சுது. அதை லதாங்கி ஜுவல்லர்ஸ்ட்ட கொடுத்தா உருக்கிடுவாங்க."

"ஜரிகையை உருக்கவா?"

"வெள்ளியாய் வரும்... எடை போட்டு காசு தருவாங்க..."

"அடடே! சேலையில் வெள்ளியாம்மா...?"

"இதென்ன குட்டி... என் கல்யாண சேலையில் என் மாமியார் மூணு பவுன் காசைக் கொடுத்து கம்பியாக்கி நெய்யச் சொன்னாங்களாம்..."

"பார்டரைக் கிழிச்ச... சேலைங்க...? அந்த மீதிப் பட்டுத் துணி எங்கம்மா?"

"சுருட்டி வைச்சிருக்கேன்...என்ன?"

"நாலைஞ்சு சேலையைச் சேர்த்து அடிச்சா உங்களுக்கு மிருதுவான ரஜாய் ஆயிடும்மா...குளிருக்குப் பதமா இருக்கும்."

"செய்செய்...அப்படியே நாலைஞ்சு ரிப்பேர் வேலையும் இருக்குது."

"தாங்கம்மா...பாத்து தரேன்..."



"நகை ரிப்பேருடி... ஆசாரிகிட்ட கொடுத்து கையோட வாங்கி வந்துரு..."

"ஜரிகை விசயமே எனக்குத் தெரியலை... தங்க வேலை சுத்தமாத் தெரியாதும்மா..."

"நானே கடைக்கு போன் போட்டு ஆசாரியை இருக்கச் சொல்லி விவரமும் சொல்றேன்... கொடுத்து, சரிபார்த்து வாங்கிட்டு வந்தாப் போதும்."

"நகையோடப் போறது... பயம்மா இருக்கும்மா..."

"பஸ்சிலேயா போற பயப்பட...?"

"பிறகு...பிறகெப்படி?"

"காந்தன் வாரத்துக்கு மூணு நாலு நாள் டவுனுக்குத்தான் போறான்... வர்றான்... இத்தனை மூட்டையோட உன்னைத் தனியை அனுப்ப முடியுமா? அவனோடதான் அனுப்பணும்."

இதே உத்தரவை பெரியம்மா காந்தனுக்குப் போட, அவன் எதிர்பேச்சில்லாமல் சம்மதித்தான்.

"காலையில பத்துக்குள்ளே தயாராய் இருக்கட்டும். கூட்டிட்டுப் போறேன்..."

கமலி அவனைத் தவிர்க்க நினைத்தாள் என்றாலும் அவனது சீண்டல்கள், கேலிகள் இல்லாதது வெறுமையாகவும் தோன்றியது.

காந்தனும் ஒதுங்கியே போனான்.

"என்னடா விளையாடக் கூட உக்காருவதில்லை?"

"ஆடிட் வேலை கொஞ்சம் இருக்குது பாட்டி... அதுதவிர நம்ப தோட்டக் கணக்கு, பழங்களை விற்க சரியான ஆள் பார்க்கன்னு அலைச்சல்... அந்த அசதி..."

அவன் ஒதுங்குவது புரிந்தது.

நிம்மதியோடு வேறொரு உணர்வும் நெருடியது. கமலியும் குன்றி ஓரமாய் நின்று கொண்டாள். இப்போது அவனோடு நெல்லைக்குப் போக நேர்வது புதுப் பிரச்சனை.

"தென்காசிக்கு வேணா போயிட்டு வர்றேனேம்மா... சோமு அண்ணன் சம்சாரம் கூப்பிட்டா துணைக்கு வருவாங்க... சாருக்குத் தொந்தரவு?"

"நான் கமலியைத் தூக்கிட்டு போகணுமா பாட்டி?"

"ச்சீ... போடா..."

"பிறகென்ன தொந்தரவு...? காரிலேதானே போறோம்...?"

"அவள் ஒரு மரியாதைக்குச் சொல்றா... நாளைக்கு தயாராயிருப்பா... என்ன குட்டி...?"

"சரி... சரிங்கம்மா..."

"இந்தக் கடிதங்களையும் டைப் செய்துடறியா?"

தலையாட்டினாள்.

குரலைத் தணித்தான்.

"என்கூட வர ஏன் இத்தனை யோசனை. பிரபாகர்கிட்ட உத்தரவு கேட்கணுமா?"

கேள்வி கிள்ளியது.

"நா...நா... அவரைப் பார்க்கப் போகவேயில்லை..."

"ஆனால் அவன் அவ்வப்போது இங்கே வரானில்லையா?"

"அதை நான் தடுக்க முடியாது."

"அதாவது மனசில்லை?"

"நான்தான் உங்களோட வர்றேனே சார்..."

"சரி... விடு..."



மறுநாள் காரில் ஏறினபோது இனம்புரியாத உற்சாகம் ஏற்படத்தான் செய்தது.

கடைகளுக்குப் போகும் பெண்களுக்கு ஏற்படும் இயல்பான ஆர்வம் ...

சீயெல்லோ கார் வழுக்கிப் பறந்தது.

டேப் வழியே சன்னமாய் சிதார் இசை.

"ஏன் உனக்கு என் கூட வர இஷ்டமில்லை கமலி?"

"இல்...இல்லையே..."

"இல்லைங்கறது எனக்குத் தெரியும் குட்டி..."

குனிந்திருந்தாலும் அவள் முக மாற்றம் உணர்ந்து முறுவலித்தான்.

"சாரி... பாட்டியோட பழக்கம் அப்படி அழைச்சுட்டேன் சரி பதில் சொல்லேன்..."

"நா... நானும் ஒரு கேள்வி கேக்கறேனே...?"

"கேளு..."

"என்னை ஏன் வம்பாய் கூட்டிட்டு வந்தீங்க?"

"ம்ம்? அதுவா காரணம்னு சொல்லணும்னா அது எங்க பரம்பரை தான்... இரத்தத்திலே ஊறின வீம்பு... நினைச்சதை நடத்திடற மிராசு திமிர்!"

"நீங்க மிராசு பரம்பரையா... அதெப்படி?"

'சட்'டென்று சந்தேகக் கேள்வி துள்ளி வெளியே விழுந்து விட்டது உணர்ந்தபின் உதட்டைக் கடித்து மென்றாள். என்ன முட்டாள்தனம்!

"ம்ம்... இப்பவும் உதடு சிவக்குது... ஆனால் முகம் முன்னைப்போல வெளிறவில்லை... நல்ல நிறம்..."

"மன்னிச்சிடுங்க... சார்..."

"பிரபாகர் சொன்னானா நான் தத்துப் பேரன்னு?"

## 8

"பாட்டிதான் சொன்னாங்க..."

"உன்கிட்ட ஜாஸ்தி பேசறாங்க..."

"நான் கேட்கலை. எல்லாருக்கும் தெரிஞ்ச விபரம்ன்னு இயல்பா சொல்லிட்டாங்க...."

"ஆக நீயும் இயல்பாய் என் பிறப்பை சத்தேகப்பட்டுட்ட?"

"தப்பு சார்... தெரியாம உளறிட்டேன்..."

"என்மேல கோபம்.... அதான் வார்த்தை விட்டுட்ட....."

"இல்லை.... முட்டாள்தனமாய்..."

"முழுசாய் விவரம் தெரிஞ்சுக்கோ.... எங்கம்மாவும் இதே மிராசு பரம்பரைதான். அவங்க விரும்பி கல்யாணம் செய்து கிட்டதும் ஒரு நல்ல குடும்பத்து பிள்ளையை. ஆனால் அப்பாவுக்கு உழைப்புன்னா கொஞ்சம் கசப்பு... அதனால அவர் அண்ணன் தம்பியோடு ஏற்பட்ட சச்சரவிலே அப்பா இறந்துட்டாங்க... சிலர் கொலைன்றாங்க... தெரியலை. குடும்பத்துக்கு அவப்பேர் வேண்டாம்னு அதை ரொம்ப துருவித் துழாவலை. ஊர் மறக்கணும்னு மூடினதை அம்மாவால மறக்க முடியலை. தற்கொலை செய்துகிட்டாங்க.."

அவன் தாடை இறுகியிருந்தது.

" உங்களை விட்டுட்டா?"



"அப்பாவின் இழப்பை அம்மாவால் தாங்கமுடியலை. நான் விவரம் தெரியாத குழந்தை ஏங்கமாட்டேன்ற நினைப்பு..."

"கடவுளே..."

"பெரியம்மா என்னைத் தத்து எடுத்திருக்கலைன்னா நான் ரோட்டிலே அனாதரவா நாய்குட்டி போல எச்சில்ல வளர்ந்திருக்க வேண்டியது."

அவளிடம் பேச்சில்லை.

"என்ன.."திரும்பிப் பார்த்தவன் பதறினான். "என்ன கண்ல தண்ணி? முப்பது வருடக் கதைக்கு இப்ப ஏன் அழணும்? அதுவும் எனக்காக?"

"நா... நா.... அந்தக் குட்டிப் பாப்பாக்காக அழறேன்..." என்றாள் மெள்ள.

வாய்விட்டு சிரித்தான்.

நெல்லையப்பர் கோயில் வாசலில் கமலியை இறக்கி விட்டவன், ஒரு ஆட்டோவையும் பேசி விட்டான்.

"ராமசாமி தெரிஞ்சவர். உன் வேலையெல்லாம் முடிஞ்சதும் இவர் ஆட்டோவில் ஏறினா ஓட்டல் ஆர்யாசிலே கொண்டு விடுவார் சொல்லிட்டேன்...."

"அங்கே... நடந்தே வந்துடுவேன் சார்..."

"கையில சாமான் இருக்குமே... தவிர வெயிலும் அதிகம். எத்தனை மணிக்கு மதியம் சாப்பிடுவே.. ஒண்ணரை..?"

"எதுக்கு?"

"சாப்பிடத்தான்.."

"இங்கேயே பழமும் இளநீரும் வாங்கிக் குடிச்சுக்கறேன். நாலு மணிக்கு ஊர் திரும்பிடலாம்னீங்க?"

"அதுவரை உன்னைப் பட்டினி போட எனக்கு மனசில்லை பாட்டி அலறிடுவாங்க.... சாப்பிடத்தான் ஆர்யாஸ் வரச் சொன்னேன்..."

"சரி..."

"வரேன்.. பை, பை," கார் விலகியது.

முதலில் நகைக்கடையைத் தேடி உருக்கவேண்டிய சரிகையையும் பழுது பார்க்கவேண்டிய நகைகளையும் எடை போட்டுத் தந்தாள். வெள்ளிக் கரண்டிகளை மெருகேற்றி பெயர் அடிக்கச் சொன்னாள்.

"ரெண்டு மணி நேரத்துல உங்க வேலை எல்லாம் முடிஞ்சிடுங்கம்மா."

மணி பதினொன்றுதான் சாவகாசமாய் சுற்றிப் பார்க்கலாம். வீட்டுச் சாமான்களுக்கு பெரியம்மா தனியே பணம் தந்திருந்தார்கள். இவள் சம்பளம் வேறு கையில் இருந்தது. ஆக தெம்பாய் கடைகளை ஏறி அலசினாள்.

ஆனால் யோசித்து வேண்டியது மட்டும் வாங்கினாள். நேரம் இன்னும் மிஞ்சவே விஸ்தீரமாய் தெரிந்த ரெடிமேட் கடைகளுக்குப் போனாள். பெரும்வாரியாய் சல்வார்கள்தான் - விதவிதமான தினுசு விலைகளில்.

இப்படித் தன்னால் தைக்க முடியுமா?

ஆவலுடன் அவற்றைப் புரட்டியபோதுதான் அந்தச் சிரிப்புக் குலுங்கியது.

கேட்ட சிரிப்பு தொனி.. யாருடையது?

குறுகுறுப்புடன் துணி தொங்கல்களை விலக்கிப் பார்த்தாள். பார்த்த கணமே நினைப்பு வந்துவிட்டது. அதிகம் பேரைப் பரிச்சயம் கொண்டவளில்லை கமலி. தவிர இந்தப் பெண்ணின் அழகு தனி அவளைச் சந்தித்த சந்தர்ப்பமும் தனி!



இரு மாதங்களுக்கு முன் காந்தனின் அலுவலகத்தில் பார்த்த அந்தப் பெண், விற்பனையாளரிடம் சொன்னாள்.

"இந்த மூணு சல்வாரும் ஓ.கே. ஆனால் டெய்லர் வரணும்... எனக்கேற்றது போல ஆர்டர் செய்யணும்..."

"வழக்கம் போலத்தான் மேடம்... வரச் சொல்லிவிட்டேன்."

"சீக்கிரம் வேலையை முடிச்சுட்டு நான் மதியம் அவரைப் பார்க்கப் போகணும், நேரத்தோட வரலைன்னா.. கோபப்படுவார்.... பசி தாங்கமாட்டார்."

"டொரினோ குடிக்கறிங்களாம்மா?"

"டயட் கோக் இருந்தா கொடுங்க... வேறெதுவும் வேணாம்..."

மணி பனிரெண்டரை. ஆசாரி வேலைகளை முடித்திருப்பார்.

நகைக் கடைக்குப் போய் அத்தனையையும் கணக்குப் பார்த்து கட்டி, பத்திரப்படுத்தினாள். ஆட்டோவில் 'ஆர்யாஸ்' இறங்கியபோது மணி ஒண்ணேகால்.

பெண்கள் அறைக்குப் போய் முகம் கழுவி, தலை சீவி வந்தவளை ஒரு பேரர் அணுகினான்.

"அம்மா... நீங்க கமலியா?"

"ஆமா..."

"ஜெயகாந்தன் சாருக்காகக் காத்திருக்கீங்களா?"

"ஆமா..."

"இப்பத்தான் போன் செய்து உங்ககிட்ட தகவல் தரச் சொன்னாரும்மா. ஏதோ அவசர வேலையாம்... வரமுடியலையாம். உங்களைச் சாப்பிட சொன்னார்."

"ஓ....?"

"உக்காருங்க... என்ன கொண்டுவரட்டும். ஸ்பெஷல் மீல்ஸ்?"

அந்த ஏ.சி. சூழலிலும் அவள் வெப்பமாய் உணர்ந்தாள்.

தனியே இங்கே அமர்ந்து சாப்பிடுவதா?

"இல்லே... வேணாம்.. எனக்கும் வேலை இருந்துச்சு... அவர் காத்திருப்பாரேன்னுதான் சொல்லிட்டு போகவந்தேன்..."

"ஒரு நிமிடத்தில் சாப்பாடு..."

"வேணாங்க... நன்றி..."

வெளியே வெயில் கொளுத்தியது. பஸ் ஸ்டாண்டின் அருகே என்பதால் குறுக்கும் நெடுக்குமாய் மக்கள் வழிய, பஸ்கள் உறுமலுடன் ஓடின.

நான்கு மணிக்கு அலுவலகத்திலிருந்து கிளம்புவதாய் திட்டம்.

இன்னும் இரண்டரை மணி நேரத்தை எப்படிக் கழிப்பது?

இப்போது வரமுடியாதென்றவர் நாலு மணிக்கு வருவதென்ன நிச்சயம்?

அவசர வேலை என்னவாக இருக்கும்?

சட்டென்று துணிக்கடையில் பார்த்த அழகியின் நினைப்பு வந்தது. அவளும் அவசரம் என்றுதானே பறந்தாள்? 'அவர் பசி தாங்கமாட்டார்... லஞ்ச் அவருடன்' என்றவள் குறிப்பிட்டது காந்தனைத்தானோ?

புத்தி மேலும் கொதித்தது.

சட்டென்று பஸ் நிலையத்திற்குள் நுழைந்தவள் விசாரித்து பஸ் ஏறியும் விட்டாள்.

அழகியுடன் சாப்பிட உட்கார்ந்தவருக்கு நாலு மணிக்குக் கிளம்ப மனம் வராது.



அதுவரை தான் இங்கே என்ன செய்வது? வீடு போனால் ஏதேனும் வேலை இருக்கும். தவிர நகையும், பணமுமாய் தனியே நிற்பதும் உசிதமில்லை.

காந்தன் அழைத்தபோதே தன்நிலைப் புரிந்து மறுத்திருக்க வேண்டும். என்னதான் பழகினாலும் பொது இடத்தில் முதலாளிக்கு வேலைக்காரியுடன் சமதையாய் உட்கார்ந்து சாப்பிட கூசும். அதுவும் அழகிய நாகரீகப் பெண்களை விட்டுவிட்டு... இந்த எளியவளுடன்...

ஏனோ மனம் பிரபாகரைத் தேடியது.

ஒரு காபியை இருவரும் சேர்ந்து பருக காந்தன் தடைபோட்டது உறுத்தியது.

மறுநாள் பிரபாகர் வந்து வருந்தினான்.

"இருட்டறவரை காத்திருந்தேன் கமலி...சரி இனி எப்ப வர்றே?"

"முடியும்னு தோணலைங்க..."

அவள் பதிலில் நனைந்த அப்பளமாகிப்போனதே அவன் முகம்.

இன்று பிரபாகரைப் போய் பார்த்தால் என்ன?

பெரியம்மாவிடம் நகைகளையும் பணத்தையும் பத்திரமாய் சேர்க்கும்வரை உள்ளே உதைத்தது.

வாங்கின பொருட்களை எல்லாம் காட்டியபிறகு தான் பரிசாக வாங்கிவந்த போட்டோ பிரேமைத் தந்தாள்.

"இதென்னடி...."

"உங்களுக்கும்மா... எங்கம்மா அப்பா படத்தை வைக்க ஒண்ணு வாங்கினேன்... அப்படியே உங்களுக்கும் தானம்..."

"பரிசுன்னு சொல்லுடி..."

"நேத்து வாரியார் விளக்கம் வாசிச்சேம்மா... தானமங்கறது தன்னைவிடப் பெரியவங்களுக்குதான் உயர்வதுக்காய் கொடுப்பது... தர்மம் ஏழைகளுக்கு அவங்க உயர்வதுக்காய் கொடுப்பதுன்னு...!"

"சபாஷ்... வாசிக்கறதை உள்ளே நிறுத்திக்கறே...! தாங்க்ஸ்டீ... என்னை யோசிச்சு வாங்கி வந்திருக்கியே..."

"அய்யாவும் நீங்களுமாய் இருக்கற படத்தை இதிலே வைச்சு தலைமாட்டிலே வைச்சுக்கோங்கம்மா..."

"நல்ல யோசனைதான்!"

"அய்யா படம் தனியா மாலை போட்டிருந்தா பிடிக்காதுன்னீங்க... உங்களோட சேர்ந்திருக்கற படத்தைப் பார்த்தா ஆறுதலா இருக்குமில்ல?"

முதியவளின் முகம் இளகி கண்கள் நீர் கோர்த்தன.

"வைக்கட்டுமாம்மா?"

"வை...வை... ஆனால் இந்தப் பயல் உன்னை இப்படி ஒண்டியா அனுப்பினதுதான் எனக்குப் பிடிக்கலை... வரட்டும் அவன்..."

"இதாம்மா வசதி...நானாத்தான் வந்தேன்..."

"மெயின் ரோட்டிலேருந்து இங்கே ஒண்ணரை கிலோமீட்டர்... இத்தனை சாமானோட நடந்து வர்றதா வசதி?"

"ரொம்ப கனமில்லம்மா...சாயங்காலம் நான் கொஞ்சம் நடந்துட்டு வரட்டுமா?"

"தேவையில்லாமல் நொய் நொய்ம்பா... அதான் எனக்குப் பிடிக்காது...போணும்னா சொல்லிட்டுப் போ..."

"அதாம்மா சொல்றேன்...!"



சிரித்தனர்.

"சோமு சம்சாரம் சரோஜா வந்துட்டுப் போனா... அந்தக் குட்டியோட இவ்வளவு நேரம் விளையாட்டு..."

"நான் இருக்கப்போ வரமாட்டேங்கறாங்க... அவங்க வீடும் கொஞ்சம் தள்ளியா... நானும் போறதில்ல..." வருத்தப்பட்டாள்.

"அ...அது கொஞ்ச கூச்சம் அவளுக்கு...இன்னும் குழந்தை பால்குடி மறக்கலை... நினைச்சபடி சுத்த முடியாதுல்ல..."

"கால் பிடிச்சு விடவாம்மா?"

"ஆயாசம்டீ... படுக்கறேன்... நீ போ..."

அறைக்கு வந்த கமலி வாங்கி வந்த புகைப்பட சட்டத்திற்குள் பெற்றோரின் படத்தைப் பொருத்தினாள். நெல்லையப்பர் கோயில் வாசலில் வாங்கிய மல்லிகைச் சரத்தில் சிறிது கிள்ளி படத்திற்கு வைத்தாள்.

மீதியை தான் சூட்டிக்கொண்டு உற்சாகமாய் பிரபாகரைப் பார்க்கக் கிளம்பினாள்.

தடுக்க ஆளில்லை... வெகு ஆவலாய் போனவளுக்கு ஏமாற்றம் தான் காத்திருந்தது. பிரபாகர் வீட்டில் இல்லை.

அவன் நாய் மட்டும் இவளைச் சுற்றிவந்து வாலாட்டியது.

தான் வந்துபோன அடையாளமாய் கூந்தல் பூச்சரத்திலிருந்து சில மல்லிகை மொட்டுக்களை உதிர்த்து ஜன்னல் வழியே வீட்டுக்குள் வீசினாள்.

மெள்ள வீடு திரும்பியவளை சோமு பதற்றமாய் கேட்டான்-

"எங்கம்மா போனீங்க... பெரியம்மா உங்களை நாலு தடவை கேட்டாச்சு..."

"சொல்லிட்டுத்தானே போனேன்?"

"போன் வந்துச்சு... அந்த விசயமாய் உங்களைத் தேடினாங்க..."

பதற்றமாய் ஓடினாள்.

"என்னங்கம்மா?"

"சொன்னபேச்சு கேட்கக்கூடாதுன்னு முடிவு பண்ணிட்டியா?"

பிரபாகர் வீட்டிற்குப் போனது தெரிந்துவிட்டதோ?

"இனிமே... இல்லம்மா..."

"அவன் கோபத்துல குதிக்கிறான்..."

"யாரு...?"

"உம்... அவன்தான்... காந்தன்..."

"அவருக்கெப்படி தெரியும்?"

"ஒண்ணரை மணி நேரமாய் காத்திருந்தவனுக்குத் தெரியாதா? நீ ஆபீசுக்கு வரலைன்னதும் இங்கே போன் போட்டான் பயந்துட்டான் பிள்ளை... வயசுப்பெண்ணை கூட்டிட்டுப்போய் அவளைக் காணலைன்னா... குதிக்காமல் என்ன பண்ணுவான்..."

அப்போதுதான் நெல்லை அலுவலகத்தில் தான் தகவல் ஏதும் தராமல் வந்ததின் விபரீதம் கமலிக்குப் புரிந்தது.

"ஆமாம்மா... தோணலை..."

"சொன்னபேச்சு கேட்க வேணாம்...?"

அவன் மதியம் வரச் சொல்லி வராததால் மற்றவை மறந்து போனதைச் சொன்னாள்.

"அப்ப மதியம் நீ சாப்பிடவேயில்லையா?"

"பழமும், ஜூசும்..."



"மறுபடி தேய்ஞ்சு கட்டெறும்பாப் போறே..."

"சார் என்ன சொன்னார்...?"

"ம்ம்... வரான்... வந்து சொல்லுவான்..." பெரியவளின் குரல் அதட்டி மிரட்டியது!

"ஆபீஸ் போய் சொல்லியிருக்கணும்... தப்புதான்."

அந்த அழகியுடன் காந்தன் போனான் என்ற அனுமானத்தில் ஏற்பட்ட எரிச்சலில் மூளை மழுங்கிவிட்டது. ஏன் அந்த ஆத்திரம்? தன்னை வரச்சொல்லி வராமல் ஏமாற்றியதாலா?

அல்லது அவன் வேறு ஒரு பெண்ணுடன் போனதாலா?

தன் மனதின் ஊஞ்சலாட்டம் தனக்கே புரியாது தவித்தாள்.

ஆறரைக்கு வீட்டு வாசலில் கார் சத்தம் கேட்கவுமே சமையலறைக்கு ஓடினாள்.

பிறர் முன் திட்டு வாங்க இஷ்டமில்லை. சிங்கத்தின் குகையிலேயே அதை சந்தித்துவிடுவது.

பாண்டி தயாரித்துக்கொண்டிருந்த தேநீரில் சுக்கு, ஏலம் தட்டிப்போட்டு, பிஸ்கெட்டுகளுடன் எடுத்தவள், காந்தன் அறைக்குப் போனாள்.

முகம் கழுவிக்கொண்டிருந்தான் போலும்.

டிபன் தட்டை சின்ன வட்டமேஜையில் வைத்தவள் வாசல் சுவர் ஓரமாய் நின்றாள்.

திட்டு அதிகமானால் அப்படியே நழுவிவிட வசதியாய்!

## 9

முகம் துடைத்தபடி வந்தவனிடம் முணங்கலாய் சொன்னாள்.

"டீ சாப்பிடுங்க."

"அ... ஆங்...உபசரனை பலம்தான்..."

"மன்னிச்சிடுங்க. சொல்லிட்டு வர மறந்துட்டேன்."

"இங்க வந்தபிறகாவது போன் செய்து நீ வீடு வந்தாச்சுங்கறதைச் சொல்லலாம்ல? ஒண்ணரை மணி நேரம் காத்திருந்தேன். என்னாச்சோங்கற பயம் வேற... இதுவரை பொண்ணுங்களுக்காய் காத்தெல்லாம் கிடந்ததில்லை..."

'அதற்கு அவசியம் என்ன? பெண்கள்தான் இவன் பின்னே ஓடிவந்து ஈஷிக்கொள்கிறார்களே...' மனம் கறுவியது.

"வேலை காலையிலேயே முடிஞ்சுதா?"

"ஆமா சார்."

"அந்த சாரைத் தொலைச்சு முழுகு. ரெண்டு மணி நேரந்தான் உனக்குக் கடைத்தெருவிலே வேலைங்கறதை ஏன் சொல்லலை?"

"நாள் முழுக்க ஜவுளி, நகைக்கடையிலே கழிக்கிற அளவு நான் பணக்காரி இல்லையே."

"அதைத்தான் ஏன் முதல்ல சொல்லலைங்கறேன்?"

"நானும்தான் காத்து நின்னேன்."

"ரெஸ்டாரென்ட்ல சொல்றியா? பேரர் நீ வந்தவுடனேயே உங்கிட்ட தகவல் தந்ததாய் சொன்னான்."



ஆக அங்கேயும் விசாரித்திருக்கிறான்.

"முக்கிய வேலைன்னீங்களாம். நேரமாகும்னு தோணுச்சு. அதான் கிளம்பிட்டேன்."

"ஏன் சொல்லிட்டுக் கிளம்பலைங்கறதுதான் கேள்வி."

"தப்புதான்... மன்னிப்புக் கேட்டேனே!"

அவளது தழைந்த குரலில் அவன் மனமிரங்கியது போலும்.

"தெரிஞ்சவங்களை பார்க்கப் போகவேண்டியதாப் போச்சு..."

"தெரியும்."

"என்ன தெரியும்?" அவளைப் புருவம் உயர்த்தி பார்த்த கண்களில் வியப்பு மட்டும்தான் இருந்தது. குற்ற உணர்ச்சி இல்லை.

"அவங்களைப் பார்த்தேன்."

"யாரை?"

"அன்னைக்கு... முதல்நாள் உங்க ஆபீஸிலே பார்த்த... பொண்ணை..."

நெற்றி சுருங்கியது. "ஓ... அவங்களா...? சரி அவங்களை நான் ஏன் இப்போ பார்க்கணும்?"

"அகஸ்மாத்தாய் கடையிலே பார்த்தேன். ரொம்ப அவசரத்தில் இருந்தாங்க. அவர் பசி தாங்கமாட்டார். உடனே 'லஞ்ச்'சுக்குப் போகணும்னு அவசரப்பட, உங்களோடத்தான் அவங்க சாப்பிடப் போறதாய்..." மென்று முழுங்கி ஒருவழியாய் விசயத்தை விளக்கினாள்.

"பெரிய புள்ளியோட ஆளும்மா அது. இப்படி ஒரு 'கிசு கிசு'வை நீ பரப்பினா பாவம் என் பாட்டிக்கு இனி நானில்லை!"

"அப்படீன்னா...?"

"பெரும் அரசியல் புள்ளியின் சின்ன வீடு அந்தம்மா..."

"ஓ... சாரி. அன்னைக்கு உங்களோட ரொம்ப பேசி சிரிச்சாங்க..."

"அவங்க பேச்சே அப்படித்தான். தவிர என்னைப் பார்த்தால் எல்லாப் பெண்களுமே கொஞ்சம் ஜாஸ்தி வழிவாங்க. பெரும்புள்ளி அவங்க பேரிலே சொத்து வாங்கப் போறாராம். வில்லங்கம் இல்லாத சொத்தான்று விசாரிச்சு வைக்கச் சொல்லிட்டு, வந்து விவரம் கேட்க வந்தாங்க..."

"தப்பா நினைச்சுட்டேன் போல..."

"நான் தப்பு பண்றவனில்லை."

"அவங்க ரொம்ப அழகாயிருந்தாங்க. அதான்..."

மேலும் உளறாமல் இருக்க ஒரு அசட்டு சிரிப்பை சிரித்து வைத்தாள்.

"உன் அறையிலே கண்ணாடி இல்ல?"

"என்ன... எதுக்கு?"

"உன்னையே பார்த்துக்கறதுக்கு! நீ அவளைவிட அழகு!"

"நானா...?"

"அரளியைவிட ரோஜா சிறப்புதானே...?"

அவன் புகழ்ச்சியைத் தாளமுடியாது கவிழ்ந்தாள். முகம் செங்குழம்பானது.

"இப்ப அசல் ரோஜா நிறம்."

அவள் முகவாயில் விரல் வைத்து நிமிர்த்தினான். அதேகணம் பாட்டியின் அறையில் உள்ள அழைப்பு மணி கிணுகிணுத்தது.

"ஐயோ... பெரியம்மா..."



ஓட முயன்றாள்-கால்கள் பின்னின.

முகவாயில் அவன் விரல்பட்ட இடம் தகித்தது.

ஆனால், அன்றிரவு காந்தன் பெரியம்மாவிடம் பேசியதைக் கேட்ட வேதாளம் மறுபடி முருங்கை மரம் ஏறியது.

"என்னடா அவசர வேலை?"

"சுந்தரியைப் பார்க்கப் போனேன் பாட்டி."

"எப்படியிருக்கா?"

குரல்கள் தணிந்தன. இவள் வேலையாய் போவது போல வெளியேறி-கதவோரம் நின்றாள்.

"உடம்பு தேறலை. இன்னைக்கு மயக்கம் போட்டுட்டாளாம். அதான் சரளா சித்தி போன் பண்ணினாங்க. டாக்டரைக் கூட்டிட்டுப் போனேன்."

"என்ன சொன்னார்?"

"அனீமிக்கா இருக்காளாம். ஹீமோகுளோபின் எட்டு சதவீதம் தான் இருக்குதாம். டானிக், கீரை, பால் எல்லாம் சாப்பிடறதில்லையான்னு திட்டினார்."

"பொண்ணுக்குப் பிரசவத்தைவிட குறைப் பிரசவம் கண்டம். பெத்த குழந்தையை அள்ளிக் கொஞ்சினாலே உடம்பு பூரிச்சு தேறிடும். இது அவஸ்தை... அதுவும் கல்யாணம் ஆகாம உண்டாகிக் கலையறது..."

யாரந்த சுந்தரி?

கல்யாணமாகாமேலேயே கர்ப்பமானவள்?

அவளைக் காந்தன் ஏன் ஓடிப்போய் பார்க்க வேணும்?

"ஓயாம படிக்கிறாளாம். மேலே படிக்கணும்னா ஒழுங்கா சாப்பிடணும். எடை கூடினாத்தான் பரிட்சைக்கு உக்கார விடுவேன்னேன்."

"நல்லா சொல்லு. நம்மால் ஏற்பட்ட கேடு அவளுக்கு-இந்த மட்டும் ஒத்தாசை செய்ய முடிஞ்சதே போதும்."

அதற்குமேல் கேட்க திராணியில்லாமல் நகர்ந்தாள் கமலி.

அதிகாலையே பிரபாகர் இவளைத் தேடி வந்து விட்டான். கோழிகளைத் திறந்து. தீவனம் இரைத்த போது புழக்கடையில் நின்றான்.

"என்ன இவ்வளவு சீக்கிரமாய்?" ஓடிப் போய் விசாரித்தாள்.

"நேத்து வீட்டுக்கு வந்தியா கமலி?"

"ஆமா."

"நுழைஞ்சதும் மல்லிப்பூ வாசம்- மோகினிப் பிசாசோன்னு ஒரு நிமிடம் திகைச்சுட்டேன்."

"கமலிப் பிசாசுதான்!"

"மறுபடி என்னைப் பிடிக்க எப்ப அது வரப்போகும்?"

"ஜெய் ஜக்கம்மாவைக் கேட்டுச் சொல்றேன்."

"அதாவது பெரியம்மாவை?"

"ஐயோ... அப்படி நினைச்சுச் சொல்லலை பிரபா."

"பயந்தாங்குளி. இன்னைக்கு சாயங்காலம் வர்றியா?"

"பார்க்கிறேன்."

அன்று மாலை நினைத்தது போல கிளம்ப முடிந்தது. தடுப்பதால்தான் இத்தனை ஆர்வத்தோடு கிளம்புகிறோமோ என்று கமலிக்கு ஒரு சந்தேகம்!

நாவற்பழ நிற சன்னப் பட்டு. நெற்றியில் வாடாமல்லி வர்ண குங்குமம். தளரப் பின்னிய கூந்தல்.

"யப்பா... உன்னைப் பார்த்துட்டே இருக்கலாம் போலிருக்குது கமலி."



"ஐயோ... என்ன அப்படி சொல்றீங்க?"

"நிஜந்தான். காந்தன் இப்படிச் சொல்றதில்லை?"

நேற்று காந்தன் தன்னை ரோஜா என்றது நினைப்பு வந்தது.

"அவர்... முதலாளி."

"எனக்கு சம்பளம் தர்ற விரோதி."

"அப்படிப் பேசலாமா?"

"ஒரே குடும்பம். ஒரே பள்ளியிலே படிப்பு. அவனை அதிர்ஷ்டக் காத்து கோபுர உச்சிக்குக் கொண்டுவிட்டிருச்சு. மாளிகை, சீயெல்லோ கார். கோடீஸ்வரப் பாட்டி. நான் அவன் கையிலேருந்து சம்பளம் வாங்கி... இங்க ஒடுங்கிக் கிடக்கறேன்... பேசவும் கூடாதா?"

வீட்டை நோட்டமிட்டாள்.

வெகு சின்னது. எந்த அலங்காரமும் அற்ற மொட்டை அறை.

"என்ன பார்க்கறே?"

"இதையே ஒரு பொண்ணு அழகா வைச்சுக்குவா."

"ஒரு பொண்ணு வர்ற வரை வாழ்க்கையே மூளிதான். பிறகுதான் அலங்காரம் ஆரம்பம்."

புன்னகைத்தாள்.

"நீ சிரிக்கும்போது டபுள் அழகு." அவள் கன்னத்தை வருடினான்.

பிரபாகரனின் எதிர்பாராத இச்செய்கையில் தடுமாறினாள்-எழுந்தாள்.

"பிடிக்கலியா?"

"நான்... காபி கலக்கவா? காபி தர்றேன்னீங்களே?"

"நீ கலந்தா தனி ருசி வந்திடும்."

சுடவைத்து, கலக்க அச்சிறு கிச்சனுக்குள் அவளை ஒட்டி அவன் உரசியதில் அவஸ்தைபட்டாள்.

"வெளியே போய் குடிக்கலாமா?"

"உனக்கெங்கே பிடிக்குமோ அங்கே."

ஆனால் அங்கும் விஸ்தார தனிமை தான் பறவைகள், அணில்களைத் தவிர யாருமில்லை.

இங்கு வந்தது தப்பு எனத் தோன்றியது.

"காபி பிரமாதம் கமலி."

"உங்களைப் பத்தி ஏதாவது சொல்லுங்க."

"சொன்னேனே என் சோகக் கதையை."

"வெளியே வேற வேலைக்குப் போறதுதானே?"

"பழகின இடம், வேலை... அதான். ஆனா காந்தனுக்கு நான் இங்கேயிருக்கிறதில் இஷ்டமில்லை. அப்பப்போ என்னை வம்புல மாட்டிவிட பார்ப்பான்."

"என்ன மாதிரி...?"

"பொம்பளை விசயம்..." கண்சிமிட்டினான்.

இவளுக்கு நெஞ்சு எகிறியது.

"யாரு... என்ன?"

"சும்மா ஒரு வேலைக்கார குட்டி... என்னைத் தேடித் தேடி ஓடிவரும். இங்கே வேறென்ன பொழுதுபோக்கு? அதுகூட அவனுக்குப் பொறுக்கலை... பிரிச்சு அனுப்பிட்டான். படிக்கணுமாம் அது..."

"சின்னப் பொண்ணா?"

"பதினெட்டு இருக்கும். கிராமத்துக் குட்டி."



அந்த அலட்சிய பதில் உறுத்தியது.

"பேர் சுந்தரியா?"

சட்டென முகம் மாறினான்.

"யாரு... என்ன சொன்னான்?"

"எங்கிட்டே ஏதும் சொல்லலை. பெரியம்மாகிட்ட சுந்தரிக்கு உடம்பு முடியலைன்னு சொன்னாங்க..."

"பண்றதையும் பண்ணிட்டு இப்ப கவனிக்கிற மாதிரி பாசாங்காக்கும்?"

அவன் சூள் கொட்ட இவளுக்குக் குத்தியது.

சுந்தரியை யார் என்ன செய்தார்கள்? கேட்க முடியாமல் தவித்தாள்.

"கப்பைத் தா கமலி."

காலி கோப்பையை வாங்கியவன் அவள் விரல்களை தடவினான்.

ஒதுங்கினாள்.

"ஏன்... இங்கதான் யாருமில்லையே?"

அவள் பயத்திற்கு அதுதானே காரணம்.

"நா...நான் வரேன் பிரபாகர்."

"நான் சொல்லவேண்டியதைச் சொன்னபிறகு..."

மிக நெருங்கி நின்றான்.

"என்னை விரும்பறியா கமலி?"

தலைசாய்த்து கேட்டவனை குழப்பமாய் பார்த்தாள். யோசித்தாள். சுருட்டை முடி, உயரம், நிறம்- இவைகளை மீறி அவளுக்கு அவன் மீது இருந்த பிடித்தம் அவனும் ஒரு அநாதை என்பதுதான்-புரிந்தது.

"நாம ரெண்டு பேரும் ஒரே நிலை என்ற மாதிரி ஒரு உணர்வு."

"அனுதாபங்கற?"

"ம்ம்... இருக்கலாம்."

"கல்யாணம் பண்ணிக்குவியா என்னை?"

"நாலைஞ்சு முறைதான் பார்த்திருக்கோம்...இதுவரை அந்த மாதிரி எண்ணம் எனக்கு இல்லியே பிரபாகர்..."

அவன் முகம் இறுகியது.

"இருக்காது. ஏன்னா காந்தன் உன் கண்ணை மறைப்பான் இல்லை? முதலாளி இருக்கையிலே இந்த முட்டாளைப் பிடிக்காதுதான்."

அவளைப் பற்றினான். விலகியவளைச் சுண்டி இழுத்து முத்தமிட முயற்சித்தான். அவன் கன்னச் சொரசொரப்பில் குறுகினாள்.

"விடுங்க... விடு..."

வெற்று இடையில் பதிந்த அவன் விரல்களைப் பூரானாய் உணர்ந்து துடித்து உதறினாள்.

அவன் வாயில் காபி மணத்தை மீறி ஏதோ வாடை... குடித்திருக்கிறானே?

முழு பலத்தோடு உதறி விலக்கினாள்.

மறுபுறம் திரும்பி ஓடத் தொடங்கினாள்.



## 10

பிரபாகர் பின்தொடருகிறானோ?

திரும்பிப் பார்க்கத் துணியாமல் வேகமாய் ஓடினாள்.

அவன் அழைப்பு கேட்க, 'சட்'டென்று வேறுபுறம் திரும்பி ஓடினாள். மூச்சிரைக்க ஒரு மரத்தின் பின்னே ஒடுங்கிப் பார்த்தபோது... அவனைக் காணவில்லை.

கன்னம் எரிந்தது. அவன் இறுக்கிய தோள்கள் நடுங்கின. ஆனாலும் நடந்தாள்.

கொத்து கோலியாய் தொங்கிய மாம்பிஞ்சுகளைக் கவனிக்கவில்லை... செண்பக மணத்தில் மயங்கவில்லை... புத்தி முனைப்பாய் யோசித்தது. ஆக பிரபாகர் யோக்கியனில்லை.

பாவப்பட்ட ஒண்டிக்கட்டையுமில்லை.

இப்படி முறை தவறி நடப்பவனை நம்பி இங்கு தனியே வந்தது தப்புதான்.

ஓடிப்போய் காந்தனுக்கு நன்றி சொல்ல வேண்டும் போல உள்ளே ஒரு பரபரப்பு.

பெரியம்மா காலடியில் போய் உட்கார்ந்தாலும் போதும்- ஆறிப் போகும்.

காலை எட்டிப்போட்டாள்.

தண்ணீர் சத்தம் வலுத்திருந்தது.

அருவியாய் விழுவது போன்ற இரைச்சல்!

இது பழக்கப்படாத சத்தம்- சுற்றிலும் பார்த்தாள்.

இது புது இடம்... வேற்று பாதை. பிரபாகரைத் தவிர்க்க ஓரிருமுறை திரும்பியதில் தடம் மாறிவிட்டது.

இது மாந்தோப்பும் இல்லை. காந்தனது தோப்பு எல்லையை மீறியாயிற்றோ? தவிப்பாய் சுற்றிலும் பார்த்தாள்.

இது அருவிக்கரை...

பயத்திலும் அருவெறுப்பிலுமாய் வியர்வை வழிந்தது.

ஒரு குளியல் போட முடிந்தால் தேவலை... ஆனால், முதலில் வீடு போய் சேரவேணும்.

வானம் சிவந்திருந்தது. அரை மணி நேரத்தில் சூரியன் அஸ்தமித்து விட்டால் இங்கு குகையிருட்டுதான். துழாவி வீடு போய் சேர முடியாது... பிரபாகரைத் தவிர்த்து, வேறு பயம் அவளை ஆட்டியது. இங்குக் காட்டுப் பூனை நடமாட்டம் உண்டே... இருட்டியபிறகு இவள்மேல் பாய்ந்து பிராண்டுமோ...?

வியர்த்து உடல் குளிர்ந்தது. வெடவெடத்தாள்.

தொடைகள் கடுத்தன. ஆனால் உட்கார முடியாது. நடையை வேகமாக்கினாள்.

நிமிடத்திற்கு நிமிடம் இருள் அதிகரிப்பது போலத் தோன்ற ஓடினாள். சீக்கிரம் வீடு போனால் போதும்...

திடீரெனத் தூக்கிய கால்கள் பின்னித் தடுமாறி நின்றன...

அலறினாள்!

கண்முன் அப்படி ஒரு காட்சியை எதிர்பார்க்கவேயில்லை.

பயத்தில் மீண்டும் மீண்டுமாய் அலறினாள். அவள் எதிரே சமதரை சரேலென்று பள்ளமாகியிருந்தது- முன்னே 'கிடுகிடு' பள்ளம். விழுந்தால் உயிர் மிஞ்சாது.



நான்கு அடிகள் பின்னே போய் சரிந்து அமர்ந்தாள். நடுக்கம் அதிகமானது. இதேபோல இரண்டு எட்டு முன்னே வைத்திருந்தால் அதுவும் ஓடி வந்த வேகத்தில்... நேரே பரலோகம்தான்!

இங்கே இப்படி ஒரு பெரும் பள்ளம் வேலியின் பாதுகாப்பு இல்லாமல்..? ஒரு அபாய அறிவிப்புகூட இன்றி...?

ஓடை அருவியாய் வீழ்கிறது போலும்.

மரங்கள் அடர்ந்திருந்து சூரியனும் மங்கியிருந்ததில் வெகு அருகே வந்தபிறகுதான் ஆபத்தை நிதானிக்க முடிந்தது.

ஏதேனும் சிறு குழந்தை ஓடி விளையாடியிருந்தால்... நினைப்பில் நெஞ்சடைத்தது.

ஆக வந்த வழியே திரும்ப வேண்டியதுதான். அதை மீறி வேறு யோசிக்க திராணியற்று நடந்தாள்.

''கமலி..''

தன்னையா கூப்பிடுகிறார்கள்...?

''இங்க இங்கேயிருக்கேன்'' குரல் கம்மிக் கிடந்தது.

டார்ச் ஒளி தெரிந்ததோ? முழுக்க இருட்டாததால் ஒளியின் வீச்சு அதிகமில்லை... ஆனால் குரல் தெளிவாகியது.

''கமலி.. இப்படி வா.''

திடீரென ஒரு பனிக் கைமென்னியைப் பற்றியது போல திகைத்தாள்.

''இது... பிரபாகர் அழைப்போ? தேடிப்பிடித்துவிட்டால் இந்தக் காட்டில் அவன் அவளை என்னவும் செய்யக்கூடும்... கெடுத்து அருவியில் வீசிடவும் அஞ்சமாட்டானே...''

இறுகினாள். அழுகை பொங்கியது.

''கமலி... சத்தம் கொடு. எங்கேயிருக்கே?''

"....."

"பாட்டி கவலைப்படறாங்க கமலி... சீக்கிரம் வா."

இது காந்தன் குரல்தான்.

காந்தனின் குரலேதான்.

"காந்தன்..."

அச்சத்தில் அவன் பெயரை அறியாமலேயே அழைத்தாள்.

"நான்தான்...வா."

குபீரென அழுகை பீய்த்தடித்தது. விம்மியபடியே ஓடினாள்.

வாய் பிதற்றுவது தெரிந்தது. ஆனால் என்ன ஏதென்பதை உணரவில்லை.

நெருங்க நெருங்க டார்ச் ஒளி கூடியது.

பிசாசு போல வேகமெடுத்தாள்.

"காந்தன்..."

அவன் முகத்தைப் பார்க்க கொள்ளை ஆறுதலாயிருந்தது. தொய்ந்த அவன் மீது சரிந்தாள்.

"வேணாம்...ரொம்ப பயந்துட்டியா...? இனி பயமில்லை" இயல்பாய் அவன் அவளை அணைத்துக்கொண்டான். கரங்கள் முதுகை நீவின.

"ஐயோ... அங்கே பள்ளம்..."

"வேலியைத் தாண்டி ஏன் போனே?"

"இல்லியே...வேலி ஏதும் இல்லியே..."

"சரி விடு. அதை நாளைக்குப் பார்க்கலாம். இப்ப வீட்டுக்குப் போலாமா?" குழந்தையிடம் கேட்பது போல கேட்டான்.

"ம்ம்..." இன்னும் விசும்பினாள்.

கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துவிட்டு கூந்தலைக் கோதினான்.



"வழக்கமா இந்தப் பக்கம் வரமாட்டியே...?"

"ஊகூம்..."

"பின்னே எப்படி?"

"சும்மாதான்..."

பிரபாகரைப் பற்றிச் சொல்லும் துணிவில்லை. யோசிக்கும் திராணியற்ற கந்தலாய் தொய்ந்தாள்.

"என்னோட தோளுல சாய்ஞ்சுக்கோ..."

"எப்படி வந்தீங்க...? ரொம்ப பயந்துட்டேன்."

"என்னைக் கூப்பிட்டியே..."

"நானா?"

"பாட்டிம்மா உன்னைக் காணலைன்னதும் தேடிக் கிளம்பினேன். யாருக்கும் நீ எங்கப் போனேங்கறது தெரியலை. சோமு ஒரு பக்கமும் நான் இந்தப் பக்கமுமாய் வந்தோம்... அப்பத்தான் அலறினே..."

"ஓடினேன்... பாதி இருட்டிலே திடீர்னு என் முன்னே பெரிய சரிவு... மலைச்சரிவு..."

நடுங்கியவளை இறுக்கினான். "அதான் என் பேரைச் சொன்னியா?"

"தெரியலையே... என்ன சொன்னேன்னு தெரியலை..."

"சாரி... தெரியாமல்..."

"நம்மை அறியாத நேரத்தில் உண்மை வெளிவந்துரும் கமலி..."

அவளுக்குப் புரிந்தும் புரியாத நிலை.

அவன் அணைப்பு அருவெறுப்பாயில்லை. மேலும் ஒண்டிக் கொள்ள வேண்டும் போன்ற ஆற்றாமையைக் கிளறியது. அந்த நூதன உணர்வில் தவித்தாள்.

அவனுக்குக் குறுக்குப் பாதைகள் தெரிந்திருந்ததால் 15 நிமிடங்களில் வீடு வந்து சேர்ந்தனர்.

ஆனால், அது ஒரு பெரிய யுகமாய் தோன்றியது.

உடம்பு தொய்ந்து அழுகை முட்டியது.

அவள் அறைக்கு அழைத்துப் போனான்.

"படு கமலி."

"பெரியம்மா...?"

"நீ பத்திரமாய் வந்தாச்சுங்கிறதைச் சொல்லிடறேன். படு."

படுத்தவளைப் போர்த்தினான். அவள் தலையை நீவ, கண்களை மூடினாள். சூடாய் நீர் வழிந்தது.

"நீங்க வரலைன்னா...?"

"அதெப்படி? அழைத்தவர் குரலுக்கு வரவேணாமா? அதுவும் அழகிய பெண் அழைத்தால்...?" கேலி பேசியவன் விலகினான்.

"எங்கே போறீங்க?"

"ஒரு நிமிடம்..."

"கொஞ்ச நேரம் இருங்களேன்..."

"பாட்டிகிட்ட சொல்லிட்டு வந்துடுறேன்."

ஐந்தாம் நிமிடம் ஒரு மாத்திரையும் சூடான பாலுமாய் வந்தான். பருக வைத்தவன், "இப்படி இருக்கேன். நீ தூங்கு" என்றபடி அருகே அமர்ந்தான். மென்மையாய் முதுகைத் தட்டினான்.

ஏனோ அவளுக்குத் தன் தாயின் நினைப்பு வந்தது... அவன் தொடலில் அதே ஆதாரம் இருந்ததாலா...?

குழந்தையாய் சுருண்டிருந்தவள் உடல் சற்று நேரத்தில் தளர்ந்து அயர்ந்தது.



விழிப்பு வந்தபோது அத்தனையும் மொத்தமாய் நினைப்பு வந்தன. கடைசியாய் விழுங்கிய மாத்திரை உட்பட...

தூக்க மாத்திரையோ...?

இல்லையென்றால் அத்தனை சுலபமாய் உறக்கம் வந்திருக்காது. பயத்தில் ஜன்னி கண்டிருக்கும். தூங்கியபோது அருகே காந்தன்...

பதட்டமாய் எழுந்தாள். உடைகள் அவள் உடுத்தியபடியே தான் இருந்தன. மனம் நிம்மதியான மறுகணமே குற்ற உணர்வும் குறுகுறுத்தது.

அத்தனை அன்பாய் கவனித்தவனை கீழ்த்தரமாக்கி விட்டோமோ என்ற அவமானம்...

அறையின் மறுகோடியில் படுத்திருப்பது யார்?

நெருங்கிப் போய் பார்த்தாள். சோமுவின் மனைவி கைக் குழந்தையுடன் பாயில் உறங்கிக்கொண்டிருந்தாள்.

துணைக்கு இருக்கச் சொல்லியிருக்கிறான். நெகிழ்ந்து போனாள்.

முகம் கழுவி வந்தபோது சரோஜா எழுந்திருந்தாள்.

"எப்படிம்மா இருக்குது?"

"பரவாயில்லை... நேற்றைக்கு இப்ப ரொம்பத் தேவலை..."

"எல்லாரும் பயந்துட்டோம்மா... பொரியம்மா அழுதுட்டாங்களாம்..."

இவளுக்குள்ளும் அழுகை திரண்டது.

"அவங்களைப் போய் பார்க்கணும்..."

"இல்லம்மா... நீங்க எழுந்ததும் வந்து சொல்லச் சொன்னாரு... அய்யா..."

"அப்ப சரி..."

அவன் வார்த்தைக்கு இனி மறுபேச்சு சொல்வதாய் இல்லை அவள்.

இரண்டாம் நிமிடம் மணமாய் காபி வந்தது.

அதற்குள் சேலையைப் பிரித்து கட்டி, தலைசீவி, பொட்டிட்டிருந்தாள்.

காபியும் உள்ளிறங்க தெம்பு மீண்டது.

“என்னடி... பயந்த சுவடே தெரியாமல் உக்காந்திருக்கே...?” பெரியம்மாவின் குரலில் துள்ளி எழும்பினாள்.

“அம்மா... நீங்க ஏன் நடந்து...?”

“பின்னே... பறந்தா வரணும்?” பெரியவள் இவளைக் கட்டிக் கொண்டாள்.

“ஆட்டுக்குட்டியாட்டம் வழிதப்பி போயிட்டியாக்கும்...”

பேரனின் தோளில் சாய்ந்து நின்ற பாட்டி சீண்டினாள்.

“வழி தவறிடுச்சுதும்மா...”

“இனி தவறாமல் இருந்தா சரி...” காந்தன் ஒரு கால் சிரிப்பு சிரித்தான்.

“ரொம்ப நன்றி...”

“நேத்து போட்ட ‘கார்டினால்’ல அசந்து தூங்கிட்ட.... இன்னும் கிறக்குச்சுன்னாப் படு...”

“இல்லம்மா...”

“பேசாம படு... அரட்டி முழுக்க அடங்கட்டும்.”

“உங்களோட வந்து இருந்தா நல்லாயிருக்கும்.”

“சரி அப்ப வா...”



## 11

பெரியம்மாவின் நிழலில் ஒண்டி உடம்பு தேறினாள். சின்ன சின்ன வேலைகளும் பேச்சுமாய் மனமும் தெளிந்தது.

தானே பின்னிய கம்பளிக் குல்லா மிகச் சிறியது.

“இதைச் சோமுண்ணா குழந்தைக்குத் தந்துரட்டுமாம்மா?”

“கொடேன்...”

அதைத் தரப்போனவள் சற்றுநேரம் சோமு மனைவி சரோஜாவிடம் பேசிக்கொண்டிருந்தாள்.

“இவன் பேர் என்னன்னு கேட்டுக்கலையேக்கா நான்...”

“சொக்கன்...குட்டிச் சொக்கன்...”

குழந்தையை தலைக்குமேல் தூக்க அது ஆனந்தமாய் காலை உதைத்தது.

அதன் வாய் எச்சில் கமலி மீது வழிந்தது.

“அடடே.... துடைச்சுக்கம்மா...”

“அதிலென்னம்மா? ஒத்தாசைக்கு வேற பொண்டுக இல்லாத வீட்டுல இதுகூட செய்யாட்டி எப்படி?” “இவனை வைச்சுட்டு முன்னையமாதிரி நான் ஓடியாட முடியல... சுந்தரி இருந்தவரைக்கும் எனக்கு வேலையே மிஞ்சாது...”

“யார்... சுந்தரி...?”

“என் தங்கச்சி... நாலு மாசம் முன்னவரை இங்கேதான் இருந்தா...”

புத்திக்குள் மேகக் கூட்டங்கள் கலைந்தன.

“பிரபாகர் சொன்னார்...”

அதுவரை வெட்கச் சிரிப்புடன் பேசி சரோஜாவின் முகம் மாறியது.

“என்னவாம்?”

“இல்ல... ஒண்ணுமில்லை...”

“அவளை நாசமாக்குனது போதாதுன்னிட்டு விலாவாரியா அதைச் சொல்லிட்டுத் திரியறானாக்கும்?”

“இல்ல... எதேச்சையான பேச்சில...”

“சொல்லுங்கம்மா... நீங்க தடம் மாறி அன்னைக்கு அவனைத்தானே பார்க்க போனீங்க...?”

“ம்ம்... ஒரு காபி சாப்பிடலாம்னு கூப்பிட்டார்... போயிருந்தேன்.”

“சுந்தரிக்கு ஜூஸ் தரேன்னு எலுமிச்சை பழரசத்துல ஜின்னோ இன்னோ... அதைக் கலந்து கொடுத்துட்டான்...”

“கடவுளே...!”

“இதைப்பத்தி நான் யார்கிட்டேயும் மூச்சு விடறதில்ல... இன்னொரு சிட்டு நாசமாயிடக்கூடாதுங்கற ஆத்தாமையில இப்ப சொல்லுறேன்...”

“சின்னப் பொண்ணுதானே சுந்தரி?”

“பிளஸ் டூவா... அது படிச்சிட்டிருந்தா... நல்லா படிப்பா... காந்தன் ஐயா அவளுக்குப் போக வர சைக்கிள் கூட வாங்கி தந்திருந்தாக... காலேஜிலே சேத்துவிட்டிருப்பாக... பராசக்தி காலேஜ் பக்கத்துலதான்...? இந்தப் பாவி பிரபாகர் கூட பேசிப் பழகினா...அத்தனையும் போச்சு...” குரலைத் தணித்தாள்.



“வயத்துல கொடுத்துட்டாம்மா... விசயம் தெரிஞ்சபிறகு... காந்தனய்யா விசாரிக்கவுட்டுதான் விவரமெல்லாம் புத்தைவிட்ட பாம்பு கணக்கா வெளியே வருது...”

“பிரபாகரா...?” அதிர்ச்சியாய் கேட்டாள்.

“கல்யாணம் பண்ணி வைச்சிரலாம்னு நினைச்சோங்க... பயல் ஒத்துவரல... நாட்டுக்கட்டையை வைச்சுக்கிடலாம்... கட்டிக்கிரலாமான்னு சிரிக்கான்... பெரியம்மா அவனைத் தொரத்திவுடத்தான் சொன்னாங்க... ஆனால், ஐயா கேக்கல... கூடப் படிச்சவர்... தூரத்து உறவுன்னுட்டாரு... கஞ்சாப் பழக்கமெல்லாம் உண்டுபோல... இனி இவன் எங்கே போய் சேவகம் செய்துப் பிழைக்க? கிடந்துட்டுப் போவட்டும்னு விட்டது... நல்லப்பாம்பைக் கண்டா அடிச்சு எரிச்சர வேணாம்? ஐயா தப்புப் பண்ணிட்டாரு...”

இளகிய மனம். அதனால்தான் தன்னிடமும் பிரபாகரை விட்டுத்தரவில்லை போலும் என்று எண்ணினாள் கமலி.

அதே சமயம் அடுத்த பெண்ணும் பலியாகிவிடக்கூடாது என்று சற்று கண்டிப்பு காட்டியிருக்கிறான்... அதை முதலாளித்துவம், திமிர் என்று தான் தப்பாய் கணித்து... ச்சே...வருந்தினாள்.

“வேலை ஏதும் செய்ய வேண்டாம். உபத்திரவப்படுத்தாம கிடன்னாலும் கேக்கலைம்மா. தன்னை மானேஜர்னு பீத்திக்கிறது... சரி அப்படின்னு ஏதாவது பொறுப்பு தந்தா செய்றதுமில்ல. போன வாரங்கூட ஐயா கேட்டாரே... வேலி எல்லாம் ஒழுங்கா இருக்குதான்னு... தலையாட்டுனவன் அதையும் சரிபார்க்கலியே...?”

தலையிலிருந்த புதுத் தொப்பியைப் பிடுங்கி சப்பிக் கொண்டிருந்தான் சின்ன சொக்கன்.

“வரட்டுமா சரோஜா?”

இதுவும் கமலிக்கு அதிர்ச்சிதான்.

ஒரு வாரம் வரை உள்ளே பயம் உறைந்திருந்தது. சிறு சத்தத்திற்கும் கூட எகிறி நரம்புகள் புடைத்து பின் மெள்ள அடங்கின.

தனியாக நடக்க மனமில்லை.

பெரியம்மா உத்தரவுபடி சரோஜா துணைக்கு கூட நடந்தாள்.

பெண்கள் இருவரும் செண்பக மலர்களைப் பொறுக்கி தொடுத்தார்கள். சோமு கட்டிவிட்ட ஊஞ்சலில் மாறி மாறி ஆடினார்கள். அந்நேரம் சின்ன சொக்கன் அவன் அப்பாவின் பொறுப்பில்!

"சுந்தரி நிலை கண்டு நொறுங்கிட்டேம்மா. வெளியே வரவே அஞ்சுவேன். வேற பெண் துணையும் கிடையாதே..."

"எனக்கு முன்னே இங்கே வேலை பார்த்தவங்க... அதாவது பெண்கள் இருந்திருப்பாங்களே?"

"என்னை துச்சமாய் பார்க்குங்கம்மா... இதென்ன காட்டுல சதா கிழவியோடக் கிடக்கவேண்டியிருக்குதுன்னு கிளம்பிடுச்சுங்க. நீங்க குணவதியாய் தங்குனீங்க. எங்களுக்கெல்லாம் உங்களைப் பிடிச்சிருக்கு... இங்கனயே நீங்க இருந்துடணும்னு சாமியை வேண்டிக்கிறோம்..."

"எனக்கும் போக வேற இடமில்ல... உறவுன்னு யாருமில்ல..."

சற்று நிதானித்த கமலி தொடர்ந்தாள். "அப்படியே இருந்தாலும் நான் இங்கதானக்கா... ரொம்பப் பிடிச்சுப்போச்சு எல்லாமே..."

"அருமையான இடங்கம்மா... ஒரு நாளு நாம குத்தாலம் போயிட்டு வந்துரணும். இத்தனைப் பக்கத்துல அருவி விழ போய் தலையை நீட்டாட்டா எப்படி?"



"ம்ம்... போவோம். குளுமையான இடத்தோட... அருமையான ஆளுங்க..."

"அமையுமாம்மா இதுபோல? சுந்தரியை வீட்டுப் பொண்ணு கணக்கால்ல பார்த்துக்கறாங்க?"

"இப்ப அவள் எங்கே?"

"ஐயாவோட சித்தி ஜங்ஷனுல இருக்காங்க. டாக்டர் வசதி அங்க ஜாஸ்தியில்ல? படிப்பைக்கூட அந்தப் பிள்ளை விடலை..."

"குழந்தை...?"

"நல்ல காலம் கரு தங்கலைம்மா. ஆனா அதுல அவள் உடம்பு சீரழிஞ்சுடிச்சு. நீங்களே கலங்கிட்டீங்க, போன வாரம் சுந்தரிக்கு ஏமாந்து, கரு அழிஞ்சது பெரிய அதிர்ச்சில்ல...?"

"ம்ம்..."

முகம் தெரியாத அச்சின்ன பெண்ணிற்காய் மனம் வருந்தியது.

## 12

காலை ஆறு மணிக்கெல்லாம் காபியோடு புழக்கடை வந்தவளுக்குப் பதறியது.

என்ன அசைவு...? நிழலா அல்லது உருவமா?

கோழித் திருடனாய் இருக்குமோ? அதட்டினாள்.

"யாரது?"

"உஷ்... நான்தான் கமலி."

மர மறைவிலிருந்து வெளியே வந்தவன் பிரபாகர். பைஜாமா ஜிப்பாவில் இருந்தான். விறைப்பாய் நின்றான்.

"என்ன திருப்திதானே?" குத்தலாய் கேட்டான்.

மவுனமாய் ஒரு வாய் காபி உறிஞ்சிகொண்டாள். உலர்ந்த தொண்டைக்கு அது தேவையாய் இருந்தது.

"எனக்கு வேலை போயிடுச்சு."

அது அவளுக்குத் தெரிந்த செய்திதான். ஆனால், அலட்டவில்லை.

"ஏன்னு கேக்கமாட்டியாக்கும்?"

"உங்க வேலை போன காரணம் உங்களுக்குத் தெரிஞ்சா போதும்."

"நீதான் காரணம். மலை முகப்பில் வேலியில்லைன்னு ஏக அமர்க்களம் செய்தியே... அதான்."

"வேலியடைச்சு பாதுகாக்கிறது உங்க பொறுப்புன்னா... நீங்கல்ல பொறுப்பா இருந்திருக்கணும்?"

"யாரு உன்னை அந்தப் பக்கமா ஓடச் சொன்னா?"

"அதுக்கும் நீங்கதான் காரணம். ஞாபகம் இருக்குல்ல?"

"ஏன் ஓடணும்? பணிஞ்சிருந்தா ரெண்டு பேரும் சந்தோசமாய் இருந்திருக்கலாம்..."

"அதாவது இப்ப சுந்தரி இருக்காப்போல?"

"இப்ப என்ன... என்னை அந்த நாட்டுக் குட்டியைக் கட்டிக்கச் சொல்றியா?"

"அவளுக்கேன் அந்த விதி? படிச்சு வரட்டும். வேலை பார்த்து உலகம் புரிஞ்சபிறகு ஏத்தவனாய்ப் பார்த்து கட்டிக்கட்டும்."



"ஆக அவளுக்குக்கூட நான் லாயக்கில்லைங்கிறே...ம்ம்...?"

சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தவன் ஆழ இழுத்தான்.

விரல்கள் நடுங்கின.

"நல்லவனாய் நேர்மையானவனா இருக்கணும் புருஷன்... அவ்வளவுதான்."

"அ...அது...சும்மா..." உதடு சுழித்தான். "பணம் வைச்சிருக்கணும் அவன்... சொத்து குமிச்சிருக்கணும்..."

"சரி. உங்க நினைப்பு அப்படீன்னா... குடிக்காம, கொஞ்சம் உழைக்கலாம். உங்ககிட்டயும் பணம் சேராதா என்ன?"

"அது அப்புறம். இப்ப எனக்கு நீ வேணும் கமலி..."

"வேணும்னா...?"

சாதாரணமாய் வெலவெலத்திருப்பாள். கூப்பிடும் தூரத்தில் காந்தன் இருக்கும் தைரியம் ஆற்றில் கிடக்கும் முதலையின் தெம்பு! பேசினாள்.

"கல்யாணம் பண்ணிக்கலாம்."

"சுந்தரி பற்றி எனக்குத் தெரிஞ்ச பிறகும் இப்படிக் கேக்கறீக?"

"அவளை ஆசைப்பட்டேன். காந்தன் கலைச்சுட்டான். எனக்கு வந்திருக்க வேண்டிய சொத்து இது... அவன் அபகரிச்சுட்டான். இப்ப நீ..."

"பொண்ணு பொருள் இல்லைங்க..."

"பொருள் இருந்தாத்தான் பொண்ணு வரும்!"

அவளை மீறி முகம் சுளித்தாள்.

கவனித்துவிட்டவனின் முகம் காட்டமானது. கன்னச்சதை துடித்தது. "என்னைப் பிடிக்கலைல்ல...?" இரைந்தான்.

"உங்க பேச்சு சரியில்லை. புகைக்கறது கஞ்சாவா? அதான் பேச்சு தப்பு தப்பா வருது. இந்தப் பழக்கமெல்லாம் பிடிக்கலை..."

"கிழவிக்கும் குமரிக்கும் அவனைத்தான் பிடிச்சிருக்குதுல்ல?"

"காந்தன் உங்க சொத்தை வஞ்சகமாய் பிடுங்கிக்கலை பிரபாகர். குழந்தையாய் இருக்கையிலேயே அவரைத் தத்து எடுத்தாங்க. அதுவும் அப்பா அம்மா இறந்ததால்... இதிலே அதிர்ஷ்டமென்ன? வாழ்க்கை போக்கிலே அவருக்கு அது... உங்களுக்கு உங்க வழி..."

"என் வழியிலே பணம் இறைஞ்சுகிடக்கலியே?"

"இருந்த சொத்தை காந்தன் உழைச்சு விருத்தி பண்ணினதாய் பெரியம்மா சொன்னாங்க. உட்கார்ந்து தின்னா குன்றும் குறைஞ்சு... மறைஞ்சே போயிருக்கும்."

"பாட்டி மாதிரி பேசாதே."

"உங்களுக்கும் யாருமில்லைங்கற பரிவிலே பேசினேன். தப்புன்னா மன்னிச்சிடுங்க."

"பேச்சு வேணாங்கறேன்."

அவளை நெருங்கியவன் மீது காட்டமான புகை நெடி.

இப்போது பதட்டமானாள். சில நாட்களுக்கு முன்பு அவன் பிடியில் சிக்கியது மீண்டும் நினைவிற்கு வந்தது தெளிவாய்... பயம் வந்தது. பின்வாங்கினாள்.

"நீ... நீ... எனக்குத்தான்டீ..." கண்களில் வெறியோடு நீரும் கலந்து வழிய கத்தினான்.

"இல்ல..."

"எனக்குத்தான்... அந்த காந்தன் நாய்க்கில்லை..."

எட்டிய அவன் கையை தட்டிவிட்டாள்.



"யாரை நாய்ங்கிற?" தடுமாறியவன் முகத்தில் ஓங்கி அறைந்தாள்.

ஓடி வந்து வீட்டுப் படியேறியவளை மறித்துப் பிடித்தவன்... காந்தன்!

மூச்சிரைக்க ஏறிட்டாள்.

"என்ன மறுபடி நடுங்கறே கமலி?"

"ஒண்ணுமில்லையே..."

"பேச்சு சத்தம் கேட்டு வந்தேன். பளார்னு அறையற சத்தம் வேற கேட்டுது? பிரபாகர்கிட்ட அடி வாங்கினியா இல்ல அறை கொடுத்தியா?"

"நா... நான்தான் அடிச்சேன்."

"குட்... வெரிகுட்..." சிரித்தான்.

"காப்பாற்ற சதா நான் கண்ண பரமாத்மா மாதிரி பக்கத்தில் இருக்கிறது சாத்தியமில்லை... உனக்காய் தைரியம் வேணும்..."

முதலில் அவள் தோள்களை அழுந்தப் பற்றிய அவன் கைகள் தளர்ந்து ஆனால் தோளிலேயே இருந்தன.

சிறகடித்த நெஞ்சுக்கு அவன் அண்மை ஆறுதலாய் இருந்தது. சீவாத தலைமுடியும், மழிக்காத 'சொர சொர' கன்னங்களும் கூட வெகு கவர்ச்சியாய் தெரிந்தன.

"எதுக்கு பிரபாகர் ஐயாவுக்கு மண்டகப்படி?"

"நெருங்கினான்... உங்களைத் தப்பாய் பேசினான்..."

"உனக்கது பிடிக்கலை... ம்ம்...? எங்கம்மாகூட அப்படித் தான்..." அவள் முன்னுச்சி கேசத்தை ஒதுக்கிவிட்டான்.

"அப்பாவை மற்றவங்க பொறுப்பில்லாதவர்னு குறை சொல்றதைக் கேட்கப் பொறுக்காமத்தான்...

அவர் இழப்பைத் தாங்க முடியாமத்தான் தற்கொலை செய்து கிட்டாங்களாம்."

"ம்ம்... புரியுது. ஆனா தப்பான முடிவு."

"அந்த அன்பை நான் அனுபவிக்கக் கொடுத்து வைக்கலை. கமலி... பாட்டிகிட்ட நான் நேத்து ரொம்ப நேரம் பேசினேன்."

"ம்ம்..."

"ஓரளவு காசு தந்து பிரபாகர் அனுப்பிவிடறதைப் பத்தி. இனிமே அவன் இங்கேயிருக்கிறது சரியில்லை..."

"ஆமா."

"உன்னைப் பொண்ணு கேட்டும் பாட்டிகிட்டதான் போகணும். அதுபற்றியும் பேசினோம்."

"அ... ஆங்...?" விக்கித்து வார்த்தை வராமல் தவித்தாள்.

"இப்போதைக்கு அவங்க பெண் வீட்டுக்காரங்க. நமக்குக் கல்யாணமான பிறகு பொதுவான பாட்டி. சரியா?"

எந்த விசயத்தில் கிண்டலடிப்பது என்றில்லையா...? "என்ன பேசறீங்க... நானே பயந்து போயிருக்கேன்."

"அந்த பயம் தெளிய நான்தான் மருந்து கமலி! இந்தக் குடும்பத்துக்கு நீ ராணியானா பயமெல்லாம் தெளிஞ்சு... தனி கம்பீரம் சேர்ந்திடும்."

உடலின் மொத்த இரத்தமும் உச்சிக்குப் பாய தடுமாறி நின்றாள்.

"என்னைப் பிடிச்சிருக்கா கமலி?"

"உங்களுக்கு...?" குழறினாள்.

"ரொம்ப பிடிச்சிருக்குது. வாழ்க்கை முழுவதுக்கும் நீ போதுங்கற அளவு!"



"ஏன்... என்னைப் பிடிக்கணும்? பெரிய இடத்து சம்பந்தமெல்லாம் வர்றதாய் பெரியம்மா சொன்னாங்க..."

அதைக்கேட்டதும் தன்னை யாரோ முறுக்கிப் பிழிவது போல வலித்ததும் அவளுக்குக் கூடவே நினைவு வந்தது.

"ம்... இப்படி அழகும் ஆற்றலுமாய் ஆம்பளை இருந்தா பெண்ணைப் பெற்றவங்க துரத்துவாங்கதான்..." குறும்பாய் கண் சிமிட்டினான். "ஆனா எனக்கு உன்னைத்தான் பிடிச்சிருக்குது. துரத்த ஆரம்பிச்சிருக்கேன்..."

அதான் ஏன் என்பது போல ஏறிட்டான்.

"தன்னலமில்லாத அன்பு ரொம்ப அபூர்வம் கமலி. அது உங்கிட்ட இயல்பாய் இருந்துச்சு. படுத்தின உன் அத்தை, பாட்டியை ஒரு வார்த்தை விட்டுக்கொடுக்காத அந்த குணம்கூட அழகுதான். பொறுமையா என் பாட்டியை அனுசரிச்சதும், அப்பப்போ எங்கிட்ட நாகப்பாம்பு மாதிரி சீறினது ரெண்டுமே பிடிச்சிருந்தது. எல்லாத்துக்கும் மேலே மூஞ்சியிலே கலர் சாயம் எதும் பூசாமலேயே அழகாயிருக்கே. வேறென்ன வேணும்?"

தொண்டை உலர்ந்திருக்க, எச்சிலைக் கூட்டி விழுங்கினாள்.

"இன்னும் பாட்டிக்குக் காபி தரலை..."

"முதல்ல பதில் சொல்லு. என்னைப் பிடிச்சிருக்குதா? உன் சம்மதம் வாங்கின பிறகுதான் பாட்டிகிட்ட போய் பெண்ணு கேட்கணும்."

"யோசிக்கணும்..."

மணி ஒலித்தது. பாட்டி அவளைக் கூப்பிடுவது அப்படித்தான். ஓடினாள்.

அவனும் பாட்டி அறைக்கு அவளைத் தொடர்ந்து வந்தான்.

ஒருவர் மாற்றி ஒருவர் முகத்தை ஆவலாய் பார்த்தாள் முதியவள்.

"என்னடா சொல்லியாச்சா?"

"ஆச்சு. ஆனா கமலி இன்னும் பதில் சொல்லலை... யோசிக்கணும்கறா?"

"வம்படியாப் பேசியிருப்பே..."

கைகளைக் கட்டியபடி முறைத்தான்.

"சொல்லுவா... நல்ல பதிலாச் சொல்லுவா..."

"கொஞ்ச நேரம் மணி அடிக்க வேணாம்... தொந்தர செய்யாம இருங்கன்னு சொல்லிட்டுதானே பாட்டி போனே பாண்டிகிட்ட உங்களுக்குக் காபி கூட கொடுத்துவிட்டேனே..."

"நல்ல சகுனம்னு அடிச்சேன்டா!"

இருவரும் சிரிக்க... கமலியும் சிரித்தாள் சந்தோசமாய்... அ சந்தோசத்தில் அவள் சம்மதமிருந்தது!

